# வரவு செலவுத் திட்ட வாக்குறுதிகள்: பாராளுமன்றத்திற்கு அப்பால்

**2023 இறுதி** ஆண்டு மதிப்பீடு

ஜூன் **2024**

**© Verité Research**

## உள்ளடக்க அட்டவணை


வரவு செலவுத்திட்ட வாக்குறுதிகள்: பாராளுமன்றத்திற்கு அப்பால் ........ 2

இது எப்படி செயல்படுகிறது? ........ 2

வெளிப்படைத்தன்மை கண்காணிப்பான் ........ 2

முன்னேற்றக் கண்காணிப்பான் ........ 3

விரிவான ஆய்வு முடிவுகள் ........ 7

பொறுப்புத்துறத்தல் ........ 30

# வரவு செலவுத்திட்ட வாக்குறுதிகள்: பாராளுமன்றத்திற்கு அப்பால்

*“வரவு செலவுத்திட்ட வாக்குறுதிகள்: பாராளுமன்றத்திற்கு அப்பால்” என்பது வரவுசெலவுத் திட்ட வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் அரசாங்கத்தின் செயல்திறனைக் கண்காணிக்கும் ஒரு முன்னோடி நிகழ்நிலை தளமாகும்.*

*2017 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இந்தத் தளம், அரசாங்கம் வருடாந்த வரவு செலவுத்திட்ட உரையில் முன்வைக்கும் வாக்குறுதிகள் குறித்த இரண்டு அடிப்படைக் கேள்விகளுக்குப் பதிலளிக்க முனைகிறது:*

- *அரசாங்கம் சொல்வதைச் செய்கிறதா?*
- *அரசாங்கம் செய்வதைச் சொல்கிறதா?*

*இந்தக் கேள்விகளுக்கான பதில்களைப் பகிரங்கமாக வழங்குவதன் மூலம் டாஷ்போர்டு கீழுள்ளவற்றை அடைய முயல்கிறது.*

*(i)* *அரசாங்கத்தின் வரவு செலவுத்திட்ட வாக்குறுதிகளின் வெளிப்படைத்தன்மையை மேம்படுத்துதல்; மற்றும்*

*(ii)* *இவ்வாக்குறுதிகளுக்கு அரசாங்கத்தைப் பொறுப்பாக்குதல்*

## இது எப்படி செயல்படுகிறது?

*முன்மொழிவுகள் இரண்டு குறிகாட்டிகளைப் பயன்படுத்தி மதிப்பிடப்படுகின்றன: வெளிப்படைத்தன்மை மற்றும் முன்னேற்றம். இயங்குதளம் வருடத்திற்கு இரண்டு முறை புதுப்பிக்கப்படுகிறது. நடுஆண்டு மதிப்பீடு, அந்தந்த ஆண்டின் முதல் ஆறு மாதங்களுக்கான முன்மொழிவுகளின் முன்னேற்றம் மற்றும் வெளிப்படைத்தன்மையை மதிப்பிடுகிறது. அதேவேளை, இறுதி ஆண்டு மதிப்பீடு முழு ஆண்டுக்கான திட்டங்களின் முன்னேற்றம் மற்றும் வெளிப்படைத்தன்மையை மதிப்பிடுகிறது.*

*2023 ஆம் ஆண்டின் இறுதிஆண்டு மதிப்பீடு 2023 வரவுசெலவுத்திட்ட உரையில் வெளிப்படையாக முன்மொழியப்பட்ட 25 செலவின முன்மொழிவுகள் மற்றும் 4 கொள்கைத் திட்டங்களைக் கண்காணித்தது. செலவின முன்மொழிவுகள் செலவின ஒதுக்கீடுகள் மற்றும் அதன் அளவிடக்கூடிய விளைவுகளைக் கொண்டிருக்கும் அதேவேளை, கொள்கைத் திட்டங்கள் சட்டமியற்றும் சட்டங்கள் அல்லது நடைமுறைக்கு வர வேண்டிய ஒழுங்குமுறை அறிவிப்புக்களை (வர்த்தமானிகள்) கொண்டிருக்கின்றன.*

*ஆராய்ச்சிக் குழு, தொடர்புடைய தகவல்களை ஆன்லைனில் முன்கூட்டியே வெளிப்படுத்துவதைக் கண்காணித்தாலும், அது முதன்மையாக 2016 இன் தகவல் அறியும் உரிமைச் சட்டம் இலக்கம் 12 மூலம் செயல்படுத்தும் நிறுவனங்களுக்குத் தாக்கல் செய்யப்பட்ட தகவல் அறியும் உரிமை (RTI) கோரிக்கைகளையே சார்ந்திருந்தது. 2023 ஆம் ஆண்டின் இறுதி ஆண்டு மதிப்பீடுகளுக்கு, ஜனவரி 31, 2024 அன்று தாக்கல் செய்யப்பட்டன. மதிப்பீட்டிற்கான தகவல்கள் 28 வேலை நாட்களுக்குள் முகவர்களிடம் இருந்து ஏற்றுக்கொள்ளப்பட்டன. இந்த காலகட்டத்திற்கு அப்பால் பெறப்பட்ட எந்த தகவலும் மதிப்பீட்டிற்கு கருதப்படவில்லை.*

### வெளிப்படைத்தன்மை கண்காணிப்பான்

*இச்சுட்டியானது **அரசாங்கம் தான் செய்வது பற்றி** எந்தளவு வெளிப்படுத்துகிறது என்பதை கண்காணிக்கிறது. இது ஒவ்வொரு அமைச்சரவை தீர்மானங்கள்/வாக்குறுதிகளை செயல்படுத்தப்படுவது*

தொடர்பான தகவல்களை வழங்குவதில் காணப்படும் அரசாங்கத்தின் வெளிப்படைத்தன்மையின் நிலையை அளவிடுகிறது. சுருக்கமாக, இந்தச்சுட்டி வெளிப்படைத்தன்மையை கண்காணிக்கிறது.

முன்மொழிவுகளின் முதல் ஆறு மாத கால முன்னேற்றம் குறித்த தகவல்களை வெளியிடுவதில் அரசாங்கம் எந்த அளவிற்கு வெளிப்படையாக உள்ளது என்பதை நடு ஆண்டு மதிப்பீடு அளவிடுகிறது. ஆண்டு இறுதி மதிப்பீடு, செலவினங்களுக்கான முன்னேற்றம் மற்றும் முழு ஆண்டிற்கான கொள்கைத் திட்டங்கள் பற்றிய தகவல்களை வெளியிடுவதில் அரசாங்கத்தின் வெளிப்படைத்தன்மையை அளவிடுகிறது.

வெளிப்படைத்தன்மை என்பது மதிப்பீட்டு காலகட்டத்தின்போது கிடைக்கப்பெற்ற தகவல்களின் அடிப்படையில் அமைந்துள்ளதோடு பின்வருமாறு வகைப்படுத்தப்படுகிறது:

| | |
|---|---|
| **வெளிப்படையற்றது** | எவ்வித தகவலும் இல்லை. |
| **மட்டுப்படுத்தப்பட்டது** | எவ்வித முன்னேற்றத்தையும் தீர்மானிக்க போதுமான தகவல் இல்லை. |
| **ஒத்துழைக்கப்படாதது** | தகவல்களைப் பெறுவதற்கும் மதிப்பிடுவதற்கும் கடும் முயற்சி தேவைப்பட்டது. |
| **ஒத்துழைக்கப்பட்டது** | தகவல்கள் காலதாமதமின்றி வழங்கப்பட்டன. |
| **வெளிப்படையானது** | முன்னேற்றம் பற்றிய தகவல்கள் கேற்பதற்கு முன்னரே வெளிப்படுத்தப்பட்டிருந்தன. |

## முன்னேற்றக் கண்காணிப்பான்

இந்தச் சுட்டியானது **அரசாங்கம் தாம் செய்வதாக சொல்வதை** எந்தளவுக்கு செய்கிறது என்பதை கண்காணிக்கிறது. பொறுப்பான நிறுவனங்களால் உருவாக்கப்பட்ட காலக்கெடு மற்றும் மயில் கற்களை அடிப்படையாகக் கொண்டு வாக்குறுதிகளை நடைமுறைப்படுத்துவதில் அரசாங்கத்தின் முன்னேற்ற நிலையை மதிப்பிடுகிறது.

எங்கள் கடந்த ஆண்டுகளின் அனுபவத்தின் அடிப்படையில், 2023 ஆம் ஆண்டின் இறுதியில் முன்னேற்றத்தைக் கண்காணிக்கும் பொருட்டு "உரிமை கோரப்படாதது" எனும் ஒரு புதிய வகைப்பாட்டை நாங்கள் அறிமுகப்படுத்தியுள்ளோம். குறித்த முன்மொழிவுகளை செயல்படுத்துவதற்கு பொறுப்பாளராக நிதி அமைச்சினால் (MOF) அடையாளப்படுத்தப்பட்ட முகவர் நிறுவனங்கள் அப் பொறுப்பை மறுக்கும் சந்தர்ப்பங்களில், குறித்த முன்மொழிவுகளை வகைப்படுத்துவதற்கு இப் புதிய வகைப்பாடு பயன்படுகிறது.

அடுத்த ஆண்டு முதல், செலவின முன்மொழிவுகளுக்கான நடு ஆண்டு மதிப்பீட்டின் முன்னேற்றம், பின்வருமாறு வகைப்படுத்தப்படும்:

| | |
|---|---|
| **உரிமை கோரப்படவில்லை** | தேசிய வரவுசெலவுத்திட்டத் திணைக்களம் (DNB) அல்லது அரசிறைக் கொள்கைகள் திணைக்களம் (DFP) ஆல் அடையாளம் காணப்பட்ட நடைமுறைப்படுத்தும் முகவரகம் (IA) |

வரவுசெலவுத்திட்ட வாக்குறுதியின் மீதான அதன் அதிகார வரம்பை மறுத்தது.

| | |
|---|---|
| வெளிப்படுத்தப்படவில்லை | தேசிய வரவுசெலவுத்திட்டத் திணைக்களம் (DNB)) அல்லது அரசிறைக் கொள்கைகள் திணைக்களம் (DFP) ஆல் அடையாளம் காணப்பட்ட நடைமுறைப்படுத்தும் முகவரகம் (IA) அதிகார வரம்பை நிராகரிக்கவுமில்லை, வாக்குறுதியின் நிலையைத் தீர்மானிக்கத் தேவையான தகவலை வழங்கவுமில்லை. அல்லது கிடைக்கக்கூடிய தகவல் போதுமானதாக இல்லை/பயன்படுத்த முடியாதது. |
| கைவிடப்பட்டுள்ளது | வாக்குறுதி கைவிடப்பட்டுள்ளது அல்லது பிற்போடப்பட்டுள்ளது. அத்துடன் அதன் அமுலாக்கம் கண்காணிக்கப்படும் காலஇடைவெளியில் திட்டமிடப்படாது ஒத்திவைக்கப்பட்டுள்ளது. |
| **புறக்கணிக்கப்பட்டுள்ளது** | வாக்குறுதி அமுல்படுத்தப்பட திட்டமிடப்பட்டுள்ளது, ஆனால் ஆரம்பிக்கப்படவில்லை |
| பின்தங்கியுள்ளது | வாக்குறுதி அமுல்படுத்தப்பட்டுக்கொண்டிருக்கின்றது, ஆனால் திட்டமிடப்பட்ட காலஅட்டவணையுடன் ஒப்பிடும் போது பின்தங்கியுள்ளது. |
| முன்னேறியுள்ளது | வாக்குறுதி நிறைவேற்றப்பட்டுக்கொண்டிருக்கின்றதுடன் குறித்த இலக்கை குறிப்பிடப்பட்ட நேரத்தினுள் அல்லது அதற்கு முன்னர் அடைவதற்கான நிலையில் காணப்படுகின்றது.[1] |

செலவின முன்மொழிவுகளுக்கான ஆண்டிறுதி மதிப்பீட்டின் முன்னேற்றம், பின்வருமாறு வகைப்படுத்தப்பட்டுள்ளது:

| | |
|---|---|
| **உரிமை கோரப்படவில்லை** | தேசிய வரவுசெலவுத்திட்டத் திணைக்களம் (DNB) அல்லது அரசிறைக் கொள்கைகள் திணைக்களம் (DFP) ஆல் அடையாளம் காணப்பட்ட நடைமுறைப்படுத்தும் முகவரகம் (IA) வரவுசெலவுத்திட்ட வாக்குறுதியின் மீதான அதன் அதிகார வரம்பை மறுத்தது. |
| வெளிப்படுத்தப்படவில்லை | தேசிய வரவுசெலவுத்திட்டத் திணைக்களம் (DNB) அல்லது அரசிறைக் கொள்கைகள் திணைக்களம் (DFP) ஆல் அடையாளம் காணப்பட்ட நடைமுறைப்படுத்தும் முகவரகம் (IA) அதிகார வரம்பை நிராகரிக்கவுமில்லை, வாக்குறுதியின் நிலையைத் தீர்மானிக்கத் தேவையான தகவலை வழங்கவுமில்லை. அல்லது கிடைக்கக்கூடிய தகவல் போதுமானதாக இல்லை/பயன்படுத்த முடியாதது. |

[1] வரவுசெலவுத்திட்ட ஆண்டின் ஜூன் 30 ஆம் திகதி வரை அடையப்பட்ட முன்னேற்றம், குறிப்பிட்ட காலத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட இலக்கில் 90% க்குள் இருந்தால், ஒரு வாக்குறுதி முன்னேறுவதாகக் கருதப்படுகிறது.

| | |
|---|---|
| கைவிடப்பட்டுள்ளது | வாக்குறுதியில் எவ்வித முன்னேற்றமும் இல்லை அல்லது வாக்குறுதி செயல்திட்டத்திலிருந்து நீக்கப்பட்டுள்ளது. |
| **முன்னேற்றம் அற்றது** | வாக்குறுதியின் முன்னேற்றம் அதன் இலக்கில் 33%க்கும் குறைவாக எட்டப்பட்டுள்ளது. |
| பகுதியளவு நிறைவேறியது | வாக்குறுதியின் முன்னேற்றம் அதன் இலக்கில் 33%க்கும் 66%க்கும் இடையில் எட்டப்பட்டுள்ளது. |
| கணிசமானளவு நிறைவேறியது | வாக்குறுதியின் முன்னேற்றம் அதன் இலக்கில் 66%க்கும் 80%க்கும் இடையில் எட்டப்பட்டுள்ளது. |
| முற்றாக நிறைவேறியது | வாக்குறுதியின் முன்னேற்றம் அதன் இலக்கில் 80%க்கும் அதிகமாக எட்டப்பட்டுள்ளது. |

கொள்கைத் திட்டங்களின் முன்னேற்றம் பின்வருமாறு வகைப்படுத்தப்பட்டுள்ளது:

| | |
|---|---|
| **உரிமை கோரப்படவில்லை** | தேசிய வரவுசெலவுத்திட்டத் திணைக்களம் (DNB) அல்லது அரசிறைக் கொள்கைகள் திணைக்களம் (DFP) ஆல் அடையாளம் காணப்பட்ட நடைமுறைப்படுத்தும் முகவரகம் (IA) வரவுசெலவுத்திட்ட வாக்குறுதியின் மீதான அதன் அதிகார வரம்பை மறுத்தது |
| வெளிப்படுத்தப்படவில்லை | தேசிய வரவுசெலவுத்திட்டத் திணைக்களம் (DNB) அல்லது அரசிறைக் கொள்கைகள் திணைக்களம் (DFP) மூலம் அடையாளம் காணப்பட்ட அமலாக்க நிறுவனம் (IA) அதிகார வரம்பை நிராகரிக்கவில்லை அல்லது வாக்குறுதியின் நிலையைத் தீர்மானிக்க அல்லது கிடைக்கக்கூடிய தகவல் போதுமானதாக இல்லை/பயன்படுத்த முடியாதது |
| **நிறைவேற்றப்படவில்லை** | அமைச்சரவை தீர்மானம்/முன்மொழிவின் எந்தவொரு பகுதிக்கும் தேவைப்படுகின்ற சட்டம் அல்லது ஒழுங்குமுறை அறிவித்தல் (வர்த்தமானி) வெளியிடப்படவில்லை. இதனை சம்பந்தப்பட்ட அமைச்சு /அரச நிறுவனம் எழுத்து மூலம் உறுதிப்படுத்தியுள்ளது. |
| பகுதியளவில் **நிறைவேற்றப்**பட்டுள்ளது | அமைச்சரவை தீர்மானம்/முன்மொழிவின் முழுமைக்கு அன்றி ஒரு சில பகுதிகளுக்கு மட்டும் தேவைப்படுகின்ற சட்டம் அல்லது ஒழுங்குமுறை அறிவித்தல் (வர்த்தமானி) வெளியிடப்பட்டுள்ளது. |

| | | |
|---|---|---|
| ✓ | ***நிறைவேற்றப்***பட்டுள்ளது | *கொள்கைத் திட்ட முன்மொழிவு முழுமையாக நிறைவேற்றப்பட்டுள்ளது. முன்மொழிவின் முழுமைக்கு தேவைப்படும் சட்டம் அல்லது ஒழுங்குமுறை அறிவித்தல் (வர்த்தமானி) வெளியிடப்பட்டுள்ளதுடன் மேலதிக எந்த நடவடிக்கையும் தேவையில்லை.* |

## விரிவான ஆய்வு முடிவுகள்

செலவின முன்மொழிவுகள்

| பந்தி இலக்கம் மற்றும் முன்மொழிவு | ஒதுக்கீடு (மில்லியன்) | செயற்படுத்தும் முகவர் நிறுவனம் | வெளிப்படைத்தன்மை | முன்னேற்றம் |
|---|---|---|---|---|
| 47:<br>சமுர்த்தி, முதியோர், அங்கவீனர் மற்றும் சிறுநீரக நோயாளர்களின் கொடுப்பனவுகளின் பயனாளிகளுக்கு வழங்கப்படும் அதிகரிக்கப்பட்ட கொடுப்பனவுகளை மேலும் அதிகரித்தல் | ரூபா 43,000 மில்லியன் | மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சு (சமூக வலுவூட்டல் பிரிவு)<br><br>சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் (DSD)<br><br>அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய செயலகம் (NSPD) | மட்டுப்படுத்தப்பட்டது<br><br>முன்மொழிவின் முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்கு ஆன்லைனில் எந்த தகவலும் கிடைக்கவில்லை.<br><br>ஆர்டிஐ கோரிக்கை ஜனவரி 31, 2024 அன்று தாக்கல் செய்யப்பட்டது மற்றும் தகவல் மார்ச் 25, 2024 அன்று பெறப்பட்டது. தகவல் கடிதம் மார்ச் 14, 2024 என திகதியிடப்பட்டிருந்ததுடன், இது RTI கோரிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாளிலிருந்து 28 நாட்களுக்கு அப்பால் உள்ளது. பெறப்பட்ட பதிலில் குறைந்த வருமானம் உடைய மாற்றுத்திறனாளிகள் மற்றும் சிறுநீரக நோயாளர்களுக்கான கொடுப்பனவுகள் குறித்த திட்டத்திற்கான நிதி இலக்குகள்/ உண்மைகள் பற்றிய தகவல்கள் உள்ளன. எவ்வாறாயினும், முதியோர் மற்றும் சமுர்த்தி பயனாளிகளுக்கான கொடுப்பனவு குறித்த வேலைத்திட்டம் தொடர்பான தகவல்கள் வழங்கப்படவில்லை.<br><br>வழங்கப்பட்ட தகவல்கள் முன்னேற்ற மதிப்பீட்டிற்குப் போதுமானதாக இல்லாததால், முன்மொழிவின் வெளிப்படைத்தன்மை "மட்டுப்படுத்தப்பட்டது" என வகைப்படுத்தப்பட்டது. | வெளிப்படுத்தப்படவில்லை<br><br>1) சமுர்த்திப் பயனாளிகள், 2) முதியோர்கள், 3) மாற்றுத் திறனாளிகள் மற்றும் 4) சிறுநீரக நோயாளிகள் ஆகிய நான்கு வகைப் பயனாளிகளுக்கு உதவித் தொகை வழங்குவதற்காக ஒதுக்கீடு குறித்த மேற்கொள்ளப்பட்டுள்ளது.<br><br>மாற்றுத்திறனாளிகளுக்கான தேசிய செயலகத்திலிருந்து (NSPD) ரூபா 10,800 மில்லியனுக்கான (ஒதுக்கீட்டில் 25%) முன்னேற்றம் குறித்த தகவலைப் பெற்றோம். இதில், 79%, குறைந்த வருமானம் கொண்ட ஊனமுற்றோர் மற்றும் சிறுநீரக நோயாளிகளுக்கு கொடுப்பனவுகளை வழங்க பயன்படுத்தப்பட்டது.<br><br>75% ஒதுக்கீடு மற்றும் இரண்டு வகைப் பயனாளிகளான: முதியோர் மற்றும் சமுர்த்தி பயனாளிகள் என்பவை பற்றிய தகவல் கிடைக்கவில்லை.<br><br>எனவே, முன்மொழிவின் முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்கு போதுமான தகவல்கள் இல்லாததால், முன்மொழிவு “வெளிப்படுத்தப்படவில்லை” என வகைப்படுத்தப்பட்டது. |
| 61:<br>வெள்ளத்தால் சேதமடைந்த வீதிகள் மற்றும் பாலங்களின் மறுசீரமைப்பு மற்றும் கட்டுமானம் | ரூபா 2,000 மில்லியன் | வீதி அபிவிருத்தி அதிகாரசபை (RDA) | ஒத்துழைக்கப்படாதது<br><br>முன்மொழிவின் முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்கு ஆன்லைனில் எந்த தகவலும் கிடைக்கவில்லை.<br><br>ஆர்டிஐ கோரிக்கை ஜனவரி 31, 2024 அன்று தாக்கல் செய்யப்பட்டது மற்றும் தகவல் அடங்கிய முதல் பதில் மார்ச் 4, 2024 அன்று பெறப்பட்டது. தகவல் கடிதம் பெப்ரவரி 21, 2024 திகதியிடப்பட்டிருந்ததுடன், அது | முன்னேற்றம் அற்றது<br><br>வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் (RDA) ஆர்டிஐ பதிலின்படி, மொத்த ஒதுக்கீடு மாகாணம்/பிரிவு வாரியாக ஐந்து வகைகளாகப் பிரிக்கப்பட்டது: கட்டுமானப் பிரிவு (ரூபா 900 மில்லியன்), சப்ரகமுவ மாகாணம் (ரூபா 398 மில்லியன்), மத்திய மாகாணம். (ரூபா 450 மில்லியன்), ஊவா மாகாணம் (ரூபா 84 மில்லியன்) மற்றும் தென் மாகாணம் (ரூபா 168 மில்லியன்). நான்கு மாகாணங்களின் கீழ் குறிப்பிட்ட சில |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | ஆர்டிஐ கோரிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாளிலிருந்து 21 நாட்களுக்குள்ளாகும்.<br>இருப்பினும், மொத்த ஒதுக்கீட்டில் ஏறக்குறைய 80%க்கான செயற்பாடுகளின் இலக்குகள் மற்றும் முன்னேற்றம் பற்றிய தகவல்கள் வழங்கப்படவில்லை.<br><br>18 மார்ச் 2024 அன்று (28 நாட்களுக்கு அப்பால்), ரூபா 2,000 மில்லியன் வரவுசெலவுத் திட்ட ஒதுக்கீட்டில் ரூபா 1,100 மில்லிய னுக்கான நிதி இலக்குகள் மற்றும் செயல்திறன் அடங்கிய இரண்டாவது பதில் கிடைத்தது. முன்னேற்ற மதிப்பீட்டிற்கான தகவல்கள் கடும் முயற்சியுடன் (21 நாட்களுக்கு அப்பால்) பெறப்பட்டதால், முன்மொழிவின் வெளிப்படைத்தன்மை "ஒத்துழைக்கப்படாதது " என வகைப்படுத்தப்பட்டது. | உப-செயல்பாடுகளுக்கு முன்னேற்றம் பற்றிய தகவல்கள் கொடுக்கப்பட்டிருந்தாலும், கட்டுமானப் பிரிவின் கீழ் ஒதுக்கீட்டிற்கான முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்கான தகவல்கள் வழங்கப்படவில்லை.<br><br>வழங்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில், நான்கு மாகாணங்களுக்கு ஒதுக்கப்பட்ட ரூபா 1,100 மில்லியன் ரூபாயில் 86.78 மில்லியன் மட்டுமே செலவிடப்பட்டுள்ளது,<br><br>கிடைக்கக்கூடிய தரவுகளின் அடிப்படையில் மற்றும் கட்டுமானப் பிரிவானது ரூபா 900 மில்லியன் ஒதுக்கீட்டில் எதையும் செலவழிக்கவில்லை எனக் கருதினால், ஒட்டுமொத்த நிதி முன்னேற்றம் 4% ஆகும்.<br><br>முன்னேற்றம் 33% க்கு குறைவாக இருப்பதால் "முன்னேற்றமற்றது" என வகைப்படுத்தப்பட்டுள்ளது. |
| 49:<br>சிறுவர் போஷாக்கினை மேம்படுத்தல்: தற்போதுள்ள மேலதிக ஊட்டச்சத்து திட்டங்களை வலுப்படுத்தல் | ரூபா 500 மில்லியன் | சுகாதார அமைச்சு (MOH) | ஒத்துழைக்கப்படாதது | கைவிடப்பட்டுள்ளது |
| | | | முன்மொழிவின் முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்கு ஆன்லைனில் எந்த தகவலும் கிடைக்கவில்லை.<br><br>ஆர்டிஐ கோரிக்கை 31 ஜனவரி 2024 அன்று தாக்கல் செய்யப்பட்டது மற்றும் அதற்கான தகவல்கள், RTI கோரிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாளிலிருந்து 21 நாட்களுக்குப் பிறகு ஆனால் 28 நாட்களுக்குள் மார்ச் 13, 2024 அன்று பெறப்பட்டது.<br><br>வழங்கப்பட்ட தகவல் முன்னேற்ற மதிப்பீட்டை நடத்துவதற்கு பொருத்தமானதாக இருந்தது.<br><br>முன்னேற்ற மதிப்பீட்டிற்கான தகவல்கள் கடும் முயற்சியுடன் (21 நாட்களுக்கு அப்பால்) பெறப்பட்டதால், முன்மொழிவின் வெளிப்படைத்தன்மை "ஒத்துழைக்கப்படாதது" என வகைப்படுத்தப்பட்டது. | ஆர்டிஐ கோரிக்கை யின் பதிலுக்கேற்ப, சுகாதார அமைச்சின் ஊட்டச்சத்து பிரிவு, ஆறு மாவட்டங்களில் கடுமையான ஊட்டச்சத்து குறைபாடுடன் (SAM) அடையாளம் காணப்பட்ட 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கான வளர்ப்புத் திட்டம்' என்ற தலைப்பில் நிதி அமைச்சின் (MOF) தேசிய வரவுசெலவுத்திட்ட திணைக்களத்திடம் (DNB) மார்ச் 15, 2023 அன்று, பதிவு செய்யப்பட்ட வழங்குநர்களிடமிருந்து பரிந்துரைக்கப்பட்ட உணவுப் பொருட்களை வாங்குவதற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட குடும்பங்களுக்கு சான்றாவணங்களை (வவுச்சர்கள்) வழங்க ஒரு முன்மொழிவை சமர்ப்பித்து நிதி கோரியது..<br>இருப்பினும், முன்மொழிவை செயல்படுத்துவதற்காக கோரப்பட்ட நிதியைப் DNB இலிருந்து சுகாதார அமைச்சு பெறவில்லை.<br><br>எனவே, வரவுசெலவுத்திட்ட ஆண்டுக்குள் முன்மொழிவு நடைமுறைப்படுத்தப்படாததால், முன்மொழிவு “கைவிடப்பட்டதாக” வகைப்படுத்தப்பட்டுள்ளது. |
| 54: | | | ஒத்துழைக்கப்படாதது | முன்னேற்றம் அற்றது |

| | | | | |
|---|---|---|---|---|
| வெள்ளப் பாதுகாப்பு முறைமையினை மேம்படுத்துதல்: மா ஓயா, அத்தனகலு ஓயா மற்றும் பெந்தர கங்கையினை அடிப்படையாகக் கொண்ட நீர்ப்பாசன அமைப்புக்களை செயற்படுத்தல் | ரூபா 500 மில்லியன் | நீர்ப்பாசன அமைச்சு (MOI) | முன்மொழிவின் முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்கு ஆன்லைனில் எந்த தகவலும் கிடைக்கவில்லை.<br><br>ஆர்டிஐ கோரிக்கை 31 ஜனவரி 2024 அன்று தாக்கல் செய்யப்பட்டது மற்றும் தகவல் RTI கோரிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாளிலிருந்து 21 நாட்களுக்குப் பிறகு ஆனால் 28 நாட்களுக்குள் மார்ச் 12, 2024 அன்று பெறப்பட்டது.<br><br>வழங்கப்பட்ட தகவல் முன்னேற்ற மதிப்பீட்டை நடத்துவதற்கு பொருத்தமானதாக இருந்தது.<br><br>முன்னேற்ற மதிப்பீட்டிற்கான தகவல்கள் கடும் முயற்சியுடன் (21 நாட்களுக்கு அப்பால்) பெறப்பட்டதால், முன்மொழிவின் வெளிப்படைத்தன்மை "ஒத்துழைக்கப்படாதது" என வகைப்படுத்தப்பட்டது. | ஆர்டிஐ கோரிக்கை யின் பதிலுக்கேற்ப, திட்டத்திற்கு நிதியளிப்பதற்காக MOI ரூபா 500 மில்லியன் ஐக் கோரியுள்ள நிலையில் (மொத்த ஒதுக்கீடு ரூபா 500 மில்லியன்), திறைசேரியிடமிருந்து குறித்த அமைச்சு ரூபா 83.688 மில்லியன் மட்டுமே பெற்றுள்ளது. டிசம்பர் 2023 நிலவரப்படி, 17% நிதி முன்னேற்றத்தை அடைந்து, பெறப்பட்ட அனைத்து நிதிகளையும் MOI செலவிட்டுள்ளது.<br><br>கொடுக்கப்பட்ட தகவலுக்கேற்ப, டிசம்பர் 2023 நிலவரப்படி இலக்கிடப்பட்ட 100% இல் 40% பௌதீக முன்னேற்றம் எட்டப்பட்டுள்ளது.<br><br>வரவுசெலவுத்திட்ட ஆண்டுக்குள் பெறப்பட்ட ஒட்டுமொத்த முன்னேற்றம் 28% ஆகும்.<br><br>முன்னேற்றம் 33% க்கு குறைவாக இருப்பதால் "முன்னேற்றமற்றது" என வகைப்படுத்தப்பட்டுள்ளது. |
| 6:<br>வெளிநாட்டு முதலீடுகளை கவருவதற்காக புதிய பொருளாதார வலயங்களை அமைத்தல்: மேல் மாகாணம், வடமேல் மாகாணம், அம்பாந்தோட்டை மற்றும் திருகோணமலையில் புதிய பொருளாதார வலயங்கள். | ரூபா 300<br><br>மில்லியன் | முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சு (MOIP) | ஒத்துழைக்கப்பட்டது<br><br>முன்மொழிவின் முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்கு ஆன்லைனில் எந்த தகவலும் கிடைக்கவில்லை.<br><br>ஆர்டிஐ கோரிக்கை 31 ஜனவரி 2024 அன்று தாக்கல் செய்யப்பட்டது, மேலும் 2024 பிப்ரவரி 27 அன்று தகவல் பெறப்பட்டது, இது ஆர்டிஐ கோரிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாளிலிருந்து 14 நாட்களுக்கு அப்பால் உள்ளது, ஆனால் 21 நாட்களுக்குள்ளாகும்.<br><br>முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்கான தகவல்கள் சரியான நேரத்தில் வழங்கப்பட்டதால், முன்மொழிவுகளின் வெளிப்படைத்தன்மை "ஒத்துழைக்கப்பட்டது " என வகைப்படுத்தப்பட்டது. | **பகுதியளவு** நிறைவேறியது<br><br>தற்போதுள்ள வலயங்களில் (1) மேல் மாகாணத்தில் வாகவத்த கைத்தொழில் வலயம் மற்றும் (2) வடமேல் மாகாணத்தில் பிங்கிரிய EPZ ஆகிய இரண்டு உட்கட்டமைப்பு திட்டங்களுக்கான பௌதீக மற்றும் நிதி இலக்குகள் மற்றும் முன்னேற்றம் பற்றிய தகவல்களை MOIP வழங்கியுள்ளது.<br><br>பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில், அவ்விரு வலயங்களிலும் உள்ள இரண்டு உட்கட்டமைப்பு திட்டங்களுக்குமான மதிப்பிடப்பட்ட மொத்த செலவு ரூபா 3,896 மில்லியன் ஆகும்.<br>இதில், ரூபா 300 மில்லியன் அவ்விரு கருத்திட்டங்களுக்கும் பின்வருமாறு ஒதுக்கப்பட்டுள்ளது: (1) பிங்கிரிய EPZ இல் அணுகல் பாதை (ரூபா 68.14 மில்லியன்), மற்றும் (2) வாகவத்த கைத்தொழில் வலயத்திற்கான மின்சாரம் (ரூபா 231.86 மில்லியன்). |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | டிசம்பர் 2023 நிலவரப்படி, மேற்கூறிய இரண்டு உட்கட்டமைப்பு திட்டங்களும் 74% பௌதீக முன்னேற்றம் மற்றும் மொத்தமாக ரூபா 300 மில்லியனை செலவிட்டு100% நிதி முன்னேற்றத்தையும் அடைந்துள்ளன.<br><br>எவ்வாறாயினும், திருகோணமலை மற்றும் அம்பாந்தோட்டையில் உள்ள மற்ற இரண்டு முன்மொழியப்பட்ட வலயங்கள் பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை.<br><br>பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில், முன்மொழிவின் முன்னேற்றம் "பகுதியளவில் நிறைவேற்றப்பட்டுள்ளது" என வகைப்படுத்தப்பட்டது. |
| 48:<br>முதியோர் / மாற்றுத் திறனாளிகள் / விதவைகள் வீட்டலகு தொழில்முயற்சியாளர் களை வலுப்படுத்துதல். | ரூபா 250<br><br>மில்லியன் | மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சின் சமூக வலுவூட்டல் பிரிவு<br><br>சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் முதியோர்களுக்கான தேசிய செயலகம், அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய செயலகம் | மட்டுப்படுத்தப்பட்டது<br><br>ஆன்லைனில் கிடைக்கப்பெறும் தகவல்கள் முன்மொழிவின் முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்கு போதுமானதாக இல்லை.<br><br>ஜனவரி 31, 2024 அன்று ஆர்டிஐ கோரிக்கை தாக்கல் செய்யப்பட்டது; இருப்பினும், பல பின்தொடர்தல்கள் இருந்தபோதிலும் செயல்படுத்தும் நிறுவனத்திடமிருந்து எந்த பதிலும் வரவில்லை.<br><br>பெறப்பட்ட தகவல்கள் முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்கு போதுமானதாக இல்லாததால், முன்மொழிவின் வெளிப்படைத்தன்மை "மட்டுப்படுத்தப்பட்டது" என வகைப்படுத்தப்பட்டது. | வெளிப்படுத்தப்படவில்லை<br><br>முன்மொழிவின் முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்கு போதுமான தகவல்கள் ஆன்லைனில் முன்கூட்டியே கிடைக்கவில்லை என்பதோடு ஆர்டிஐ கோரிக்கை மூலம் செயல்படுத்தும் நிறுவனத்திடமிருந்து எந்த தகவலும் பெறப்படவுமில்லை.<br><br>தகவல் கிடைக்காத காரணத்தினால் முன்னேற்றத்தை மதிப்பிட முடியாததால், முன்மொழிவின் முன்னேற்றம் "வெளிப்படுத்தப்படவில்லை" என வகைப்படுத்தப்பட்டது. |
| 51:<br>10 விவசாய தொழில் முயற்சியாண்மை கிராமங்களை நிறுவுதல் | அசல் ஒதுக்கீடு- ரூபா 250 மில்லியன்<br><br>திருத்தப்பட்ட ஒதுக்கீடு- ரூபா 190 மில்லியன் | நீர்ப்பாசன அமைச்சு (MOI) | **ஒத்துழைக்கப்படாதது**<br><br>முன்மொழிவின் முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்கு ஆன்லைனில் எந்த தகவலும் கிடைக்கவில்லை.<br><br>ஆர்டிஐ கோரிக்கை 31 ஜனவரி 2024 அன்று தாக்கல் செய்யப்பட்டது மற்றும் தகவல் ஆர்டிஐ கோரிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாளிலிருந்து 21 நாட்களுக்குப் பிறகு ஆனால் 28 நாட்களுக்குள் 2024 மார்ச் 12 அன்று பெறப்பட்டது. | **கணிசமானளவு** நிறைவேறியது<br><br>பெறப்பட்ட தகவல்கள் அசல் ஒதுக்கீடு ரூபா 250 மில்லியன் இலிருந்து ரூபா 190 மில்லியன் ஆக திருத்தப்பட்டுள்ளதை குறித்துக்காட்டுகின்றன. முன்னேற்ற அறிக்கை மற்றும் செயற்பாட்டுத் திட்டத்தின் படி, 11 விவசாய தொழில்முயற்சியாண்மை கிராமங்களை நிறுவ எதிர்பார்க்கப்படுகிறது. அமைச்சு ரூபா 166.96 மில்லியனுக்கான இம்ப்ரெஸ்ட் கோரிக்கையை தாக்கல் செய்திருக்க ரூபா 91.105 |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | வழங்கப்பட்ட தகவல் முன்னேற்ற மதிப்பீட்டை நடத்துவதற்கு பொருத்தமானதாக இருந்தது.<br><br>முன்னேற்ற மதிப்பீட்டிற்கான தகவல்கள் கடும் முயற்சியுடன் (21 நாட்களுக்கு அப்பால்) பெறப்பட்டதால், முன்மொழிவின் வெளிப்படைத்தன்மை "ஒத்துழைக்கப்படாதது" என வகைப்படுத்தப்பட்டது. | மில்லியன் பெற்றுள்ளதோடு, அதை அமைச்சு முழுமையாகப் பயன்படுத்தியுள்ளது.<br><br>கிடைக்கக்கூடிய தகவலின்படி, 88% பௌதீக முன்னேற்றம் மற்றும் 48% நிதி முன்னேற்றம் (ரூபா 91.105 மில்லியன் / ரூபா 190 மில்லியன்) எட்டப்பட்டுள்ளது.<br><br>முன்மொழிவின் ஒட்டுமொத்த முன்னேற்றம் 68% என்பதால், இதன் முன்னேற்றம் "கணிசமானளவு நிறைவேறியது" என வகைப்படுத்தப்பட்டது. |
| 65:<br>இளம் பெண் தொழில்முயற்சியாளர்களை ஊக்குவிப்பதற்கான கடன் திட்டம் | ரூபா 250<br><br>மில்லியன் | மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சு | ஒத்துழைக்கப்பட்டது | **முன்னேற்றம் அற்றது** |
| | | | முன்மொழிவின் முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்கு ஆன்லைனில் எந்த தகவலும் கிடைக்கவில்லை.<br><br>ஆர்டிஐ கோரிக்கை 31 ஜனவரி 2024 அன்று தாக்கல் செய்யப்பட்டது மற்றும் தகவல் ஆர்டிஐ கோரிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாளிலிருந்து 14 நாட்களுக்குள் அதாவது பெப்ரவரி 12, 2024 அன்று பெறப்பட்டது.<br><br>வழங்கப்பட்ட தகவல் நிதி முன்னேற்ற மதிப்பீட்டை நடத்துவதற்கு பொருத்தமானதாக இருந்ததோடு தகவல்கள் சரியான நேரத்தில் வழங்கப்பட்டதால், முன்மொழிவுகளின் வெளிப்படைத்தன்மை "ஒத்துழைக்கப்பட்டது " என வகைப்படுத்தப்பட்டது | 2023 ஆம் ஆண்டிற்கான செயற்பாட்டுத் திட்டத்தையும், ஜனவரி 19, 2024 நிலவரப்படி உண்மையான நிதி முன்னேற்றத்தையும் செயல்படுத்தும் நிறுவனம் வழங்கியுள்ளது. ஆனால் பௌதீக முன்னேற்றத்தை பற்றிய தகவல்களை வழங்கவில்லை<br><br>பெறப்பட்ட தகவலின்படி, டிசம்பர் 12, 2023 அன்று, திறைசேரி ரூபா 50 மில்லியனை வெளியிட்டது. அமைச்சு , 20 பயனாளிகளை இலக்காகக் கொண்டு ரூபா 5 மில்லியன் வழங்கியுள்ளது, மேலும் 103 பயனாளிகளை இலக்காகக் கொண்டு மற்றொரு ரூபா 25.1 மில்லியன் வெளியிட திட்டமிடப்பட்டிருந்தது.<br><br>குறித்த நிதியாண்டுக்குள் ஒதுக்கப்பட்ட ரூபா 250 மில்லியனில் ரூபா 5 மில்லியன் ரூபா மட்டுமே செலவிடப்பட்டுள்ளதால், நிதி முன்னேற்றம் 2% ஆக உள்ளது.<br><br>முன்னேற்றம் 33% க்கு குறைவாக இருப்பதால் "முன்னேற்றமற்றது" என வகைப்படுத்தப்பட்டுள்ளது. |
| 10: | | | ஒத்துழைக்கப்பட்டது | பகுதியளவு நிறைவேறியது |

| | | | | |
|---|---|---|---|---|
| முதலீட்டுக்கு நட்புச் சூழல் - செலவுகள், நடைமுறைகள் மற்றும் நேரத்தை குறைத்தல் மற்றும் வெளிப்படைத்தன் மையை மேம்படுத்துவதற்கான சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்தி ஆரோக்கியமான வியாபார சூழலை உருவாக்குதல். | ரூபா 200 மில்லியன் | முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சு (MOIP) | ஆன்லைனில் கிடைக்கப்பெறும் தகவல்கள் முன்மொழிவின் முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்கு போதுமானதாக இல்லை.<br><br>ஆர்டிஐ கோரிக்கை 31 ஜனவரி 2024 அன்று தாக்கல் செய்யப்பட்டது, மேலும் 2024 பிப்ரவரி 27 அன்று தகவல் பெறப்பட்டது, இது ஆர்டிஐ கோரிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாளிலிருந்து 14 நாட்களுக்கு அப்பால், ஆனால் 21 நாட்களுக்குள் உள்ளது.<br><br>வழங்கப்பட்ட தகவல் முன்னேற்ற மதிப்பீட்டை நடத்துவதற்கு பொருத்தமானதாக இருந்ததோடு தகவல்கள் சரியான நேரத்தில் வழங்கப்பட்டதால், முன்மொழிவுகளின் வெளிப்படைத்தன்மை "ஒத்துழைக்கப்பட்டது" என வகைப்படுத்தப்பட்டது | முதலீட்டுக்கு நட்புச் சூழலை உருவாக்குவதற்கான நிலையான இயக்க நடைமுறையை (SOP) தயாரிப்பதற்காக பங்குதாரர்கள் 29.08.2023 மற்றும் 30.08.2023 ஆகிய திகதிகளில் கருத்தரங்கு பங்கேற்றதாக அமைச்சு ஆன்லைனில் வெளியிட்ட தகவல் கூறுகிறது. இலக்கு நிர்ணயிக்கப்பட்ட ரூபா 200 மில்லியனில் 114.93 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளதாக ஆர்டிஐ பதில் வெளிப்படுத்துகிறது.<br><br>ஆர்டிஐ க்கு பதிலளிக்கும் வகையில் MOIP வழங்கிய செயல்பாட்டுத் திட்டங்கள் மற்றும் முன்னேற்ற அறிக்கைகளின்படி, 72% பௌதீக முன்னேற்றம் மற்றும் 57% நிதி முன்னேற்றம் அடையப்பட்டுள்ளது.<br><br>ஒட்டுமொத்த முன்னேற்றம் 65% என்பதால் முன்மொழிவின் முன்னேற்றம் "பகுதியளவில் நிறைவேற்றப்பட்டுள்ளது" என வகைப்படுத்தப்பட்டது. |
| 16:<br>கறுவா தொழில் துறைக்கான புதிய திணைக்களம் | ரூபா<br><br>200 மில்லியன் | கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு<br><br>கறுவா அபிவிருத்தித் திணைக்களம் (DCD) | ஒத்துழைக்கப்பட்டது<br><br>ஆன்லைனில் கிடைக்கப்பெறும் தகவல்கள் முன்மொழிவின் முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்கு போதுமானதாக இல்லை.<br><br>ஆர்டிஐ கோரிக்கை 31 ஜனவரி 2024 அன்று தாக்கல் செய்யப்பட்டது மற்றும் தகவல் ஆர்டிஐ கோரிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாளிலிருந்து 14 நாட்களுக்குள் 2024 பெப்ரவரி 20 அன்று பெறப்பட்டது.<br><br>வழங்கப்பட்ட தகவல் நிதி முன்னேற்ற மதிப்பீட்டை நடத்துவதற்கு பொருத்தமானதாக இருந்ததோடு தகவல்கள் சரியான நேரத்தில் வழங்கப்பட்டதால், முன்மொழிவுகளின் வெளிப்படைத்தன்மை "ஒத்துழைக்கப்பட்டது " என வகைப்படுத்தப்பட்டது | பகுதியளவு நிறைவேறியது<br><br>இணையத்தில் வெளியிடப்பட்ட அமைச்சரவை தீர்மானங்களின்படி, DCDயை நிறுவுவதற்கு ஆகஸ்ட் 14, 2023 அன்று அமைச்சரவை ஒப்புதல் கிடைத்தது. 'ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு' தெரிவிக்கையில், DCD பணிப்பாளர் திரு. ஜானக லிண்டார, நவம்பர் 09, 2023 அன்று 'ஸ்பைஸ் கவுன்சிலின் (Spice Council) 19வது வருடாந்த பொதுக் கூட்டத்தில்' இலங்கை ஜனாதிபதி மற்றும் விவசாயம் மற்றும் தோட்டத்துறை அமைச்சருடன் கலந்து கொண்டார்.<br><br>எனவே, DCD இலிருந்து பெறப்பட்ட பின்வரும் 10 பண்புசார் தகவல்களின் அடிப்படையில் முன்மொழிவின் பௌதீக முன்னேற்றம் மதிப்பிடப்படுகிறது: (1) செப்டம்பர் 1, 2023 முதல் DCDயை நிறுவுவதற்கு ஆகஸ்ட் 14, 2023 அன்று அமைச்சரவை ஒப்புதல், (அமைச்சரவை பத்திரம் எண். 23/1501/601/050). (2) ஏற்றுமதி விவசாய திணைக்களத்தின் இயக்குநர் (மேம்பாடு) திரு. எல்.எம்.ஜே.கே. லிண்டார, டிசிடியின் செயற்பாட்டு தலைமை இயக்குநராக நியமிக்கப்பட்டார். இருப்பினும், தலைமை இயக்குநரை |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | தவிர வேறு எந்த அதிகாரியும் அந்தத் துறைக்கு நியமிக்கப்படவில்லை.. (3) ஒரு புதிய நிறுவன அமைப்பு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடம் சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டது. (4) 2023 இல் தற்போது பலோல்பிட்டிய, கறுவா ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மையத்தில் பணியாற்றும் ஊழியர்கள் உட்பட 142 பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்ய ஒப்புதல் வழங்கப்பட்டது, எவ்வாறாயினும், 2023 இல் எந்த அதிகாரியும் முறையாக ஆட்சேர்ப்பு செய்யப்படவில்லை. (5) தேசிய கறுவா ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மையத்தின் முன்மொழியப்பட்ட மாற்றத்தை கோடிட்டுக் காட்டும் வகையில் அமைச்சரவைப் பத்திரம் தயாரிக்கப்பட்டுள்ளது, தற்போது DEA இன் கீழ் உள்ள அனைத்து தொடர்புடைய பௌதீக சொத்துக்களும் DCD க்கு மாற்றப்படும். (6) DCD இன் தலைமை அலுவலகத்திற்காக தனியாருக்குச் சொந்தமான கட்டிடம் வாடகை அடிப்படையில் வாங்கப்பட்டது. (7) அலுவலக உபகரணங்கள் வாங்குவதற்கான ஏலங்கள் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. (8) ஆகஸ்ட் 2023 இல் DCD சட்டத்திற்கான கருத்தியல் தாள் சட்ட வரைவாளர் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டது. (9) கறுவா தொழில்துறைக்கான பத்தாண்டு கால வரைபடம் தயாரிக்கும் பணி தற்போது நடைபெற்று வருகிறது. (10) இந்த முன்முயற்சியுடன் தொடர்புடைய இரண்டு கருத்தரங்குகள் ஏற்கனவே ஒரு சரிபார்ப்பு கருத்தரங்குடன் நடத்தப்பட்டுள்ளன. அமைச்சரவை அங்கீகாரத்திற்கு இணங்க, கறுவா வாயில் திட்டம் DCD நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது, மேலும் கட்டுமானப் பணிகளைத் தொடங்க சம்பந்தப்பட்ட நிலம் ஒப்பந்தக்காரர்களுக்கு மாற்றப்பட்டுள்ளது.<br><br>ஆர்டிஐ மூலம் பெறப்பட்ட தகவல்கள் மற்றும் ஜனாதிபதியின் ஊடகப் பிரிவின் (PMD) செய்திக்குறிப்புகளின் அடிப்படையில், DCD நிறுவப்பட்டது என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. முன்னர் விவரிக்கப்பட்ட 10 செயல்பாடுகளில், 4, 7, 8 மற்றும் 9 செயல்பாடுகள் நடந்து வருகின்றன அல்லது |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | செயல்படுத்தப்படாமல் உள்ளன. இதன் விளைவாக, 6 செயல்பாடுகள் முடிக்கப்பட்டுள்ளன, இது 60% பௌதீக முன்னேற்றத்தைக் குறிக்கிறது.<br><br>முன்மொழிவின் நிதி முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்கான தகவல்கள் கிடைக்கவில்லை.<br><br>ஒட்டுமொத்த முன்னேற்றம் 60% என்பதால் முன்மொழிவின் முன்னேற்றம் "பகுதியளவில் நிறைவேற்றப்பட்டுள்ளது" என வகைப்படுத்தப்பட்டது. |
| 20:<br>கிராமிய பாடசாலைகளில் வசதிகளை மேம்படுத்துதல்: 139 மாகாணப் பாடசாலைகளிலும், 23 தேசியப் பாடசாலைகளிலும் மிகக் குறைந்த வசதிகள் கொண்ட கிராமிய பாடசாலைகளிலும் துப்பரவேற்பாட்டு வசதிகளை நிர்மாணித்தல். | ரூபா<br><br>200 மில்லியன் | கல்வி அமைச்சு (MOE) | வெளிப்படையற்றது<br><br>முன்மொழிவின் முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்கு ஆன்லைனில் எந்த தகவலும் கிடைக்கவில்லை.<br><br>ஜனவரி 31, 2024 அன்று ஆர்டிஐ கோரிக்கை தாக்கல் செய்யப்பட்டது; பல பின்தொடர்தல்கள் இருந்தபோதிலும் செயல்படுத்தும் நிறுவனத்திடமிருந்து எந்த பதிலும் வரவில்லை.<br><br>முன்னேற்றம் குறித்து எந்த தகவலும் வழங்கப்படாததால், முன்மொழிவின் வெளிப்படைத்தன்மை "வெளிப்படையற்றது" என வகைப்படுத்தப்பட்டது. | வெளிப்படுத்தப்படவில்லை<br><br>எந்த தகவலும் ஆன்லைனில் முன்கூட்டியே கிடைக்கவில்லை என்பதோடு ஆர்டிஐ கோரிக்கை மூலம் செயல்படுத்தும் நிறுவனத்திடமிருந்தும் தகவல் பெறப்படவில்லை.<br><br>தகவல் கிடைக்காத காரணத்தினால் முன்னேற்றத்தை மதிப்பிட முடியாததால், முன்மொழிவின் முன்னேற்றம் "வெளிப்படுத்தப்படவில்லை" என வகைப்படுத்தப்பட்டது. |
| 25:<br>புதிய மருத்துவ பீடத்தினை தாபித்தல் | ரூபா 200 மில்லியன் | கல்வி அமைச்சு (MOE)<br><br>உயர் கல்விப் பிரிவு | ஒத்துழைக்கப்படாதது<br><br>பல அதிகாரப்பூர்வ இணையதளங்களில் கிடைக்கும் தகவல்கள் முன்மொழிவின் முன்னேற்றத்தை மதிப்பிட போதுமானதாக இருந்தது.<br><br>ஆர்டிஐ கோரிக்கை 31 ஜனவரி 2024 அன்று தாக்கல் செய்யப்பட்டது, மேலும் தகவல் ஆர்டிஐ கோரிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாளிலிருந்து 28 நாட்களுக்குப் பிறகு மார்ச் 20, 2024 அன்று பெறப்பட்டது.<br><br>வழங்கப்பட்ட தகவல் முன்னேற்ற மதிப்பீட்டை நடத்துவதற்கு பொருத்தமானதாக இருந்தது. | முற்றாக நிறைவேறியது<br><br>2023 மார்ச் 20 ஆம் திகதி வெளியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானி இலக்கம் 2324/12 இன் பிரகாரம், ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தில் ஐந்தாவது பீடமாக மருத்துவ பீடம் நிறுவப்படுவது உத்தியோகபூர்வமாக வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது. புதிதாக நிறுவப்பட்ட பீடத்திற்கு பீடாதிபதி நியமனத்தை உறுதிப்படுத்தும் வகையில், பீடத்திற்கான அதிகாரப்பூர்வ இணையதளமும் தொடங்கப்பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | முன்னேற்ற மதிப்பீட்டிற்கான தகவல்கள் கடும் முயற்சியுடன் (21 நாட்களுக்கு அப்பால்) பெறப்பட்டதால், முன்மொழிவின் வெளிப்படைத்தன்மை "ஒத்துழைக்கப்படாதது" என வகைப்படுத்தப்பட்டது. | மேலும் 23, ஜூன் 2023 அன்று, பாராளுமன்றத்தில் சபை அலுவல்களின் போது, ஆவணங்களை சமர்ப்பித்ததன் மூலம், கல்வி அமைச்சரால் பிரிவு 27(1) இன் கீழ், பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 21வது பிரிவு, எண். 1978 இலங்கை ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்தின் துறைகளை நிறுவுவது தொடர்பாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் பரிந்துரையின் பேரில் மற்றும் 2023 ஆம் ஆண்டு மார்ச் 20 ஆம் திகதி வர்த்தமானி இலக்கம் 2324/12 இல் வெளியிடப்பட்டது.<br>ஜூன் 23, 2023 அன்று, பாராளுமன்றத்தில் சபையின் அலுவல்களின் போது, ஆவணங்களை சமர்ப்பித்ததன் மூலம், கல்வி அமைச்சரால் பிரிவு 27(1) இன் கீழ், 1978 ஆம் ஆண்டு 16ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 21வது பிரிவு, எண். இலங்கை ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்தின் துறைகளை நிறுவுவது தொடர்பாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் பரிந்துரையின் பேரில் கட்டளை பிறப்பிக்கப்பட்டது. (பாராளுமன்ற விவாதங்கள். (2023). பத்திரங்கள் சமர்ப்பித்தல். ஹன்சார்ட் 304, தொகுதி 8, பக்கம் 6).<br><br>அத்துடன், மே 2023 இல் வெளியிடப்பட்ட பல்கலைக்கழக சேர்க்கை வழிகாட்டி புத்தகம் 2022/2023, 'உயிரியல் விஞ்ஞானம் பிரிவின்' கீழ் 'மருத்துவத்திற்கான' மாணவர் சேர்க்கைக்கான பட்டியலில் ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தை உள்ளடக்கியது.<br><br>ஆர்டிஐ க்கு பதிலளிக்கும் விதமாக MOE, 2023 மார்ச் 20 இன் அதிவிசேட வர்த்தமானி இலக்கம் 2324/12 ஐப் பகிர்ந்துள்ளது, இது ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்தை அதன் ஐந்தாவது பீடமாக உத்தியோகபூர்வமாக நிறுவுவதாகக் கூறுகிறது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | மேற்கூறப்பட்ட பண்புசார் தகவல்களின் அடிப்படையில், வாக்குறுதியின் முன்னேற்றம் "முற்றாக நிறைவேறியது" என வகைப்படுத்தப்பட்டுள்ளது. |
| 29:<br>இலத்திரனியல் கொடுப்பனவு முறை - 01.03.2024 முதல் நிதி மாற்றல் மற்றும் சேவைகளைப் பெறுவதற்கான கொடுப்பனவுகள் உட்பட அனைத்து அரசாங்க கொடுப்பனவுகளும் இலத்திரனியல் முறையில் செய்யப்படுவதை கட்டாயமாக்கும் கொள்கையை செயல்படுத்துதல். | ரூபா 200 மில்லியன் | தொழில்நுட்ப அமைச்சு (MOT) | ஒத்துழைக்கப்பட்டது<br>ஆன்லைனில் கிடைக்கப்பெறும் தகவல்கள் முன்மொழிவின் முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்கு போதுமானதாக இல்லை.<br><br>ஆர்டிஐ கோரிக்கை ஜனவரி 31, 2024 அன்று தாக்கல் செய்யப்பட்டு 21 பெப்ரவரி 2024 அன்று தகவல் பெறப்பட்டது, அதாவது 14 நாட்களுக்கு அப்பால் ஆனால் ஆர்டிஐ கோரிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாளிலிருந்து 21 நாட்களுக்குள்ளாகும்.<br><br>வழங்கப்பட்ட தகவல் முன்னேற்ற மதிப்பீட்டை நடத்துவதற்கு பொருத்தமானதாக இருந்ததோடு தகவல்கள் சரியான நேரத்தில் வழங்கப்பட்டதால், முன்மொழிவுகளின் வெளிப்படைத்தன்மை "ஒத்துழைக்கப்பட்டது " என வகைப்படுத்தப்பட்டது. | முன்னேற்றம் அற்றது<br>MOT இன் ஆர்டிஐ பதில், டிசம்பர் 31, 2023 வரையில் முடிக்கப்பட்ட பின்வரும் 11 செயல்பாடுகளை விவரிக்கிறது.<br>(1) பைலட் திட்டத்திற்காக ஒரு பணிக்குழு நிறுவப்பட்டுள்ளது, (2) 14 நிறுவனங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டன (3) லங்காபே அரசாங்கத்தின் பின்தள அணுகலை வழங்கும் அமைப்பை உருவாக்கியுள்ளது, (4) 14 நிறுவனங்களுடன் சந்திப்புக்கள் மேற்கொள்ளப்பட்டு அவற்றின் அமைப்பு மற்றும் பொறுப்புகள் பற்றி விளக்கமளிக்கப்பட்டுள்ளது., (5) நவம்பர் 22, 2023 அன்று சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது, (6) ஆவணப்படுத்தப்பட்ட வழிகாட்டுதல்கள் 14 நிறுவனங்களுடன் பகிர்ந்து கொள்ளப்பட்ட து, (7) 14 நிறுவனங்களுக்கான பயனர் உள்நுழைவுகள் உருவாக்கப்பட்டது, (8) 5 வங்கிகள் உள்வாங்கப்பட்டன, ( 9) ஒப்பந்தம் பகிரப்பட்டது (அமைப்பில் LankaPay மற்றும் CBSL செய்த மாற்றங்கள் காரணமாக ஒப்பந்தங்கள் செம்மைப்படுத்தப்பட வேண்டும்), (10) இந்த அமைப்பு இப்போது 14 நிறுவனங்களுக்கு நேரலையில் உள்ளது, மற்றும் (11) CBSL இன் படி, மற்ற வங்கிகள் மார்ச் 2024க்குள் உள்வாங்கப்படும்.<br><br>குறித்த தகவல் முழு வரவுசெலவுத் திட்டத்திற்குமான செயற்பாட்டுத் திட்டம் அல்லது முன்னேற்ற அறிக்கையை வழங்காது முன்னோடித்திட்டத்திற்காக மாத்திரமே வழங்குகிறது.<br><br>பூர்த்தி செய்யப்பட்ட செயற்பாடுகளை கோடிட்டுக் காட்டும் தகவல்களின் அடிப்படையில், முன்மொழிவின் முன்னேற்றம் "முன்னேற்றமற்றது" என வகைப்படுத்தப்பட்டுள்ளது. |
| 53: | | | ஒத்துழைக்கப்பட்டது | **கணிசமானளவு** நிறைவேறியது |

| | | | | |
|---|---|---|---|---|
| அறுவடைக்குப் பிந்தைய இழப்புக்களைக் குறைத்தல் மற்றும் களஞ்சியப்படுத்தலை மேம்படுத்துவதற்கு தேவையான அறிவு, தொழில்நுட்பம் மற்றும் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்தல். | அசல் ஒதுக்கீடு- ரூபா 150 மில்லியன்<br><br>திருத்தப்பட்ட ஒதுக்கீடு- ரூபா 148 மில்லியன் | கமத்தொழில் அமைச்சு (MOA) | ஆன்லைனில் கிடைக்கப்பெறும் தகவல்கள் முன்மொழிவின் முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்கு போதுமானதாக இல்லை.<br><br>ஆர்டிஐ கோரிக்கை 31 ஜனவரி 2024 அன்று தாக்கல் செய்யப்பட்டது மற்றும் தகவல் ஆர்டிஐ கோரிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாளிலிருந்து 14 நாட்களுக்குள் 2024 பிப்ரவரி 15 அன்று பெறப்பட்டது.<br><br>வழங்கப்பட்ட தகவல் முன்னேற்ற மதிப்பீட்டை நடத்துவதற்கு பொருத்தமானதாக இருந்ததோடு தகவல்கள் சரியான நேரத்தில் வழங்கப்பட்டதால், முன்மொழிவுகளின் வெளிப்படைத்தன்மை "ஒத்துழைக்கப்பட்டது" என வகைப்படுத்தப்பட்டது. | பெறப்பட்ட தகவலின்படி, டிசம்பர் 2023 இன் இலக்கான 100% உடன் ஒப்பிடும்போது, 88.5% பௌதீக முன்னேற்றம் எட்டப்பட்டுள்ளது.<br><br>முன்னேற்ற அறிக்கை 2023 இன் படி அசல் ஒதுக்கீடு ரூபா 147.94 மில்லியனாகக் திருத்தப்பட்டுள்ளது. ரூபா 103.71 மில்லியன் செலவிடப்பட்டு 70.11% நிதி முன்னேற்றம் அடையப்பட்டுள்ளது.<br><br>79.30% ஒட்டுமொத்த முன்னேற்றத்துடன் முன்மொழிவின் முன்னேற்றம் "கணிசமான அளவு நிறைவேறியது" என வகைப்படுத்தப்பட்டுள்ளது. |
| 64:<br>விவசாயத் தொழில்துறையில் இளைஞர்களைத் தக்கவைத்தல் - நாட்டின் ஒவ்வொரு மாவட்டத்தையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் தற்போது வேலையில்லாத 240 இளைஞர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களை விவசாய தொழில்முயற்சியாளர்களாக வலுவூட்டல். | அசல் ஒதுக்கீடு- ரூபா 120 மில்லியன்<br><br>திருத்தப்பட்ட ஒதுக்கீடு- ரூபா 119 மில்லியன் | கமத்தொழில் அமைச்சு (MOA) | ஒத்துழைக்கப்பட்டது<br><br>முன்மொழிவின் முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்கு போதுமான தகவல்கள் ஆன்லைனில் கிடைக்கவில்லை.<br><br>ஆர்டிஐ கோரிக்கை 31 ஜனவரி 2024 அன்று தாக்கல் செய்யப்பட்டது மற்றும் தகவல் ஆர்டிஐ கோரிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாளிலிருந்து 14 நாட்களுக்குள் 2024 பெப்ரவரி 15 அன்று பெறப்பட்டது.<br><br>வழங்கப்பட்ட தகவல் முன்னேற்ற மதிப்பீட்டை நடத்துவதற்கு பொருத்தமானதாக இருந்ததோடு தகவல்கள் சரியான நேரத்தில் வழங்கப்பட்டதால், முன்மொழிவுகளின் வெளிப்படைத்தன்மை "ஒத்துழைக்கப்பட்டது" என வகைப்படுத்தப்பட்டது. | முற்றாக நிறைவேறியது<br><br>MOA டிசம்பர் 2023 நிலவரப்படி பௌதீக மற்றும் நிதி இலக்குகள் மற்றும் முன்னேற்றம் பற்றிய தகவல்களை வழங்கியுள்ளது.<br><br>கொடுக்கப்பட்ட தகவலின்படி, டிசம்பர் 2023 இன் இலக்கான 100% உடன் ஒப்பிடும்போது 86.42% பௌதீக முன்னேற்றம் எட்டப்பட்டுள்ளது.<br><br>மேலும், இலக்கு நிர்ணயிக்கப்பட்ட ரூபா 118.52 மில்லியனில் ரூபா 101.66 மில்லியன் செலவிடப்பட்டு நிதி முன்னேற்றம் 86% அடையப்பட்டுள்ளது.<br><br>86% ஒட்டுமொத்த முன்னேற்றத்துடன் முன்மொழிவின் முன்னேற்றம் "முற்றாக நிறைவேறியது" என வகைப்படுத்தப்பட்டுள்ளது. |
| 5:<br>வெளிநாட்டு வர்த்தகம் மற்றும் முதலீட்டு முகவராண்மை - முதலீட்டுச் சபை, ஏற்றுமதி | ரூபா 100 மில்லியன் | கிடைக்கவில்லை | வெளிப்படையற்றது<br><br>முன்மொழிவின் முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்கு போதுமான தகவல்கள் ஆன்லைனில் கிடைக்கவில்லை.<br><br>ஜனவரி 31, 2024 அன்று மூன்று ஆர்டிஐ கோரிக்கைகள் தாக்கல் செய்யப்பட்டன; இருப்பினும், பல பின்தொடர்தல்கள் இருந்தபோதிலும், தேசிய | உரிமை கோரப்படவில்லை<br><br>அரசிறைக் கொள்கைகள் திணைக்களம் (DFP) 10.01.2024 திகதியிடப்பட்ட கடிதத்தில் ஜனாதிபதி செயலகம் மற்றும் வர்த்தக அமைச்சை இந்த முன்மொழிவை செயல்படுத்தும் முகவர்களாக அடையாளம் கண்டுள்ளது மற்றும் 17.07.2023 திகதியிடப்பட்ட கடிதத்தில் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சை |

| | | | | |
|---|---|---|---|---|
| அபிவிருத்திச் சபை, இலங்கை ஏற்றுமதி கடன் காப்புறுதி கூட்டுத்தாபனம், தேசிய அபிவிருத்தி அதிகார சபை போன்றவற்றுக்குப் பதிலாக புதிய நிறுவனத்தை நிறுவுதல். | | | வரவுசெலவுத்திட்டத் திணைக்களம் (DNB) மற்றும் அரசிறைக் கொள்கைகள் திணைக்களம் (DFP) ஆல் அடையாளம் காணப்பட்ட செயல்படுத்தும் முகவர்களிடமிருந்து எந்த பதிலும் கிடைக்கவில்லை.<br><br>முன்னேற்றம் குறித்து எந்த தகவலும் வழங்கப்படாததால், முன்மொழிவின் வெளிப்படைத்தன்மை "வெளிப்படையற்றது" என வகைப்படுத்தப்பட்டது. | செயல்படுத்தும் நிறுவனமாக வரவுசெலவுத்திட்டத் திணைக்களம் (DNB) அடையாளம் கண்டுள்ளது. இந்த மூன்று முகவர்களுக்கும் RTI கோரிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டன.<br><br>முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சு இது அவர்களின் அதிகார வரம்பிற்குள் இல்லை என்று தெளிவுபடுத்தியது, மேலும் வர்த்தக அமைச்சு இது அவர்களின் வரம்புக்கு உட்பட்டது அல்ல என்று குறிப்பிட்டு பெப்ரவரி 14, 2024 அன்று கோரிக்கையை ஜனாதிபதி செயலகத்திற்கு திருப்பி அனுப்பியது, அதே திகதியில் ஜனாதிபதி செயலகம் நிதி அமைச்சிற்கு கோரிக்கையை மாற்றியது. மார்ச் 13, 2024 அன்று, DFP தங்கள் ஆரம்ப பதிலில் குறிப்பிடப்பட்டவை செயல்படுத்தும் முகவர்களே என்பதை மீண்டும் உறுதிப்படுத்தியது.<br><br>DFP மற்றும் DNB ஆல் அடையாளம் காணப்பட்ட ஒவ்வொரு நிறுவனமும் தனது அதிகார வரம்பை மறுப்பதால், முன்மொழிவு "உரிமை **கோரப்படவில்லை**" என வகைப்படுத்தப்பட்டுள்ளது. |
| 7:<br>தேசிய உற்பத்தித்திறன் ஆணைக்குழு - பொருளாதாரத்தின் ஒவ்வொரு துறையிலும் உற்பத்தித்திறனை மேம்படுத்துதல் | ரூபா 100 மில்லியன் | கிடைக்கவில்லை | வெளிப்படையற்றது<br><br>பல அதிகாரப்பூர்வ இணையதளங்களில் கிடைக்கும் தகவல்கள் முன்மொழிவின் முன்னேற்றத்தை மதிப்பிட போதுமானதாக இல்லை.<br><br>ஜனவரி 31, 2024 அன்று இரண்டு ஆர்டிஐ கோரிக்கைகள் தாக்கல் செய்யப்பட்டன; இருப்பினும், பல பின்தொடர்தல்கள் இருந்தபோதிலும், தேசிய வரவுசெலவுத்திட்டத் திணைக்களம் (DNB) மற்றும் அரசிறைக் கொள்கைகள் திணைக்களம் (DFP) ஆல் அடையாளம் காணப்பட்ட செயல்படுத்தும் முகவர்களிடமிருந்து எந்த பதிலும் கிடைக்கவில்லை.<br><br>முன்னேற்றம் குறித்து எந்த தகவலும் வழங்கப்படாததால், முன்மொழிவின் வெளிப்படைத்தன்மை "வெளிப்படையற்றது" என வகைப்படுத்தப்பட்டது. | **உரிமை கோரப்படவில்லை**<br><br>ஆகஸ்ட் 14, 2023 அன்று தேசிய உற்பத்தி ஆணைக்குழுவை நிறுவுவது தொடர்பான அமைச்சரவை தீர்மானம் எடுக்கப்பட்டது. ஆணைக்குழுவின் நிறுவன கட்டமைப்பை தீர்மானிப்பதற்கான நிபுணர் குழுவை நியமிப்பதற்கு கௌரவ ஜனாதிபதி அவர்களால் முன்வைக்கப்பட்ட முன்மொழிவுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது. ஜனாதிபதி செயலகத்தின் செய்திக்குறிப்பின்படி, மேம்பட்ட உற்பத்தித்திறனை அடைவதற்கான உலகளாவிய சிறந்த நடைமுறைகளை ஆராய்வதற்காக பல்வேறு அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களின் உறுப்பினர்களை உள்ளடக்கிய அமைச்சுகளுக்கிடையேயான செயற்குழு ஒன்று ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. ஆஸ்திரேலிய உற்பத்தித்திறன் ஆணைக்குழுவினால் 2023 ஏப்ரல் 27 ஆம் திகதி இலங்கை செயற்குழுவிற்காக ஜனாதிபதி செயலகத்தில் ஏற்பாடு |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | செய்யப்பட்ட இணையவழி அமர்வில் இலங்கை அரசும் கலந்துகொண்டுள்ளது.<br><br>அரசிறைக் கொள்கைகள் திணைக்களம் (DFP) 10.01.2024 அன்று, ஜனாதிபதி செயலகம் மற்றும் வர்த்தக அமைச்சு ஆகியவற்றை குறிப்பிடப்பட்ட முன்மொழிவை செயல்படுத்தும் நிறுவனங்களாக அடையாளம் காட்டியது. ஆர்டிஐ கோரிக்கைகள் இரு நிறுவனங்களிடமும் தாக்கல் செய்யப்பட்டன; எவ்வாறாயினும், வர்த்தக அமைச்சு பெப்ரவரி 14, 2024 அன்று கோரிக்கையை ஜனாதிபதி செயலகத்திற்கு மாற்றியது, மேலும் ஜனாதிபதி செயலகம் இது அவர்களின் வரம்புக்கு உட்பட்டது அல்ல என்று நிதி அமைச்சிற்கு அதே திகதியில்மாற்றியது. மார்ச் 13, 2024 அன்று, அரசிறைக் கொள்கைகள் திணைக்களம் (DFP), ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்ட முகவர்கள் உண்மையில் செயல்படுத்தும் முகவர்கள் என்று மீண்டும் வலியுறுத்தியது.<br><br>DFP மற்றும் DNB ஆல் அடையாளம் காணப்பட்ட ஒவ்வொரு நிறுவனமும் தனது அதிகார வரம்பை மறுப்பதால், முன்மொழிவு "**உரிமை கோரப்படவில்லை**" என வகைப்படுத்தப்பட்டுள்ளது. |
| 23:<br>பல்கலைக்கழக பட்டங்களுக்கான தர உத்தரவாதம் மற்றும் சான்றுப்படுத்தல் சபை - இந்த முன்மொழிவை தேவையான சட்ட விதிகளுடன் செயல்படுத்த தேவையான நடவடிக்கைகளை எடுத்தல். | ரூபா 100 மில்லியன் | கல்வி அமைச்சு (MOE)<br><br>உயர் கல்விப் பிரிவு<br>அரச சார்பற்ற உயர் கல்விப் பிரிவு | **ஒத்துழைக்கப்படாதது**<br><br>ஆன்லைனில் கிடைக்கப்பெறும் தகவல்கள் முன்மொழிவின் முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்கு போதுமானதாக இல்லை.<br><br>ஆர்டிஐ கோரிக்கை 31 ஜனவரி 2024 அன்று தாக்கல் செய்யப்பட்டு தகவல் மார்ச் 11, 2024 அன்று பெறப்பட்டது, அது 21 நாட்களுக்கு அப்பால், ஆனால் ஆர்டிஐ கோரிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாளிலிருந்து 28 நாட்களுக்குள் கிடைத்தது.<br>வழங்கப்பட்ட தகவல்கள் முன்னேற்ற மதிப்பீட்டை நடத்த பொருத்தமானதாக இருந்தது.<br><br>முன்னேற்ற மதிப்பீட்டிற்கான தகவல்கள் கடும் முயற்சியுடன் (21 நாட்களுக்கு அப்பால்) | **முன்னேற்றம் அற்றது**<br><br>2023 மார்ச் 27 ஆம் திகதிக்குரிய அமைச்சரவை முடிவுகளின்படி, ஏப்ரல் 2, 2023 அன்று தர உறுதி மற்றும் அங்கீகார ஆணைக்குழுவை (QAAC) நிறுவுவதற்கான முன்மொழிவுக்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்தது. இந்த ஒப்புதலில் உயர்கல்வி (தர உறுதிப்பாடு அங்கீகாரம்) மசோதாவை அரசாங்க வர்த்தமானியில் வெளியிடுவதற்கும் பாராளுமன்றத்தில் அறிமுகப்படுத்துவதற்குமான அனுமதியும் அடங்கும். எனினும், திட்டமிட்டபடி இந்த மசோதா பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை. சட்டமா அதிபர் (AG) பரிந்துரைக்கப்பட்ட திருத்தங்களை மதிப்பாய்வு செய்த பின்னர், பல்வேறு பங்குதாரர்களின் கருத்துக்களைக் கருத்தில் கொண்டு, மசோதாவுக்கு மேலும் திருத்தங்கள் தேவை என்று முடிவு |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | பெறப்பட்டதால், முன்மொழிவின் வெளிப்படைத்தன்மை "ஒத்துழைக்கப்படாதது" என வகைப்படுத்தப்பட்டது. | செய்யப்பட்டது. இதன் விளைவாக, இந்த கூடுதல் மாற்றங்களுடன் சட்ட வரைவை உருவாக்கி புதிய பதிப்பை உருவாக்க கல்வி அமைச்சரின் ஆலோசனைக்கு அமைச்சரவை ஒப்புக்கொண்டது.<br><br>MOEயின் ஆர்டிஐ பதிலின்படி, கல்வி அமைச்சின் செயலாளரால் ஆகஸ்ட் 31, 2022 அன்று நியமிக்கப்பட்ட தொழில்நுட்ப ஆலோசனைக் குழு (TAC) பெப்ரவரி 10, 2023 அன்று வரைவு மசோதாவில் திருத்தங்களை கொண்ட அறிக்கை ஒன்றை சமர்ப்பித்துள்ளது. ஏப்ரல் 04, 2023 அன்று எடுக்கப்பட்ட அமைச்சரவை முடிவின் அடிப்படையில், 4 முதல் 7 வரையுள்ள பிரிவுகளைத் தவிர்த்து, திருத்தங்களை மசோதாவில் இணைக்க ஒப்புதல் அளிக்கப்பட்டது. அதன்பிறகு, ஏப்ரல் 2, .2023 அன்று, அங்கீகரிக்கப்பட்ட திருத்தங்களை சேர்க்க சட்டவரைஞர் திணைக்களத்திற்கு அறிவுறுத்தப்பட்டது., மற்றும் இறுதி மசோதா அனுமதிக்காக ஜூன் 22, 2023 அன்று சட்டமா அதிபருக்கு அனுப்பப்பட்டது. சட்டமா அதிபர் இன்றுவரை அரசியலமைப்பு சான்றிதழை வழங்கவில்லை (மார்ச் 06, 2024 திகதியிடப்பட்ட கடிதத்தின்படி).<br><br>MOEயின் பதிலின்படி, தேசிய உயர்கல்வி கவுன்சிலை (NHEC) நிறுவுவதற்கான வரவுசெலவுத்திட்ட உரை 2024 திட்டத்தால் இந்த முன்மொழிவு பாதிக்கப்படும், ஏனெனில் தர உத்தரவாதம் இப்போது NHEC இன் அதிகார வரம்பிற்குள் வர வேண்டும். மேலும், பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில், ஒரு தர உத்தரவாத வாரியத்தை நிறுவுவதற்கான நிதி மற்றும் பௌதீக செயல்திறன் இலக்குகள் பாராளுமன்றத்தில் மசோதா தாக்கல் செய்யப்பட்டவுடன் மட்டுமே நிர்ணயிக்கப்படும்.<br><br>மசோதா இன்னும் வெளியிடப்படவில்லை என்பதோடு அதன் நிறுவுதல் 2024 நிதியாண்டுக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளதால், இது "முன்னேற்றமற்றது" என வகைப்படுத்தப்பட்டுள்ளது. |
| | | | வெளிப்படையானது | **கணிசமானளவு** நிறைவேறியது |

| | | | | |
|---|---|---|---|---|
| *33:*<br><br>*மீன்பிடித் துறையினை விருத்தி செய்தல் - தற்போதுள்ள மீன் குஞ்சு உற்பத்தி நிலையங்களின் இயலளவினை அதிகரித்தல்* | *ரூபா 100 மில்லியன்* | *கடற்றொழில் அமைச்சு* | *2023 ஆம் ஆண்டிற்கான வருடாந்த செயற்பாட்டுத்திட்டம் மற்றும் 31.12.2023 இன் முன்னேற்ற அறிக்கை ஆகிய இரண்டும் கடற்றொழில் அமைச்சின் அதிகாரப்பூர்வ இணையதளத்தில் கிடைக்கப்பெற்றதால், தகவல் முன்கூட்டியே ஆன்லைனில் கிடைத்தது.*<br><br>*ஆர்டிஐ கோரிக்கை 31 ஜனவரி 2024 அன்று தாக்கல் செய்யப்பட்டு தகவல் ஆர்டிஐ கோரிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாளிலிருந்து 14 நாட்களுக்குள் 2024 பெப்ரவரி 19 அன்று பெறப்பட்டது.*<br><br>*முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்கான போதுமான தகவல்கள் ஆன்லைனில் முன்கூட்டியே வழங்கப்பட்டதால், முன்மொழிவு "வெளிப்படையானது" என வகைப்படுத்தப்பட்டது.* | *கடற்றொழில் அமைச்சு டிசம்பர் 2023 நிலவரப்படி உண்மையான பௌதீக மற்றும் நிதி முன்னேற்றம் குறித்த தகவலை வழங்கியுள்ளது. கொடுக்கப்பட்ட தகவலின்படி, டிசம்பர் 2023 நிலவரப்படி, 100% இலக்குடன் ஒப்பிடும்போது 60% பௌதீக முன்னேற்றம் எட்டப்பட்டுள்ளது.*<br><br>*மேலும், இலக்கு நிர்ணயிக்கப்பட்ட ரூபா 100 மில்லியனில் ரூபா 81.53 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது. நிதி முன்னேற்றம் 81.53% ஆக உள்ளது, இது டிசம்பர் 2023 நிலவரப்படி திட்டத்தின் செலவு திட்டமிடப்பட்ட வரவுசெலவை விட சற்று குறைவாக இருப்பதைக் குறிக்கிறது.*<br><br>*70.54% ஒட்டுமொத்த முன்னேற்றத்துடன் முன்மொழிவின் முன்னேற்றம் "கணிசமான அளவு நிறைவேறியது" என வகைப்படுத்தப்பட்டுள்ளது.* |
| *55:*<br>*திரவப் பால் உற்பத்தியை அதிகரித்தல் - குண்டசாலை செயற்கை சினைப்படுத்தும் நிலையத்தினை விருத்தி செய்து புதிய தொழில்நுட்பங்களை பின்பற்றுவதன் வாயிலாக திரவப் பால் உற்பத்தியை அதிகரித்தல்* | *ரூபா 100 மில்லியன்* | *விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதாரத் துறை (DAPH)* | *ஒத்துழைக்கப்படாதது*<br><br>*முன்மொழிவின் முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்கு ஆன்லைனில் எந்த தகவலும் கிடைக்கவில்லை.*<br><br>*ஆர்டிஐ கோரிக்கை ஜனவரி 31, 2024 அன்று தாக்கல் செய்யப்பட்டு தகவல் தகவல் ஏப்ரல் 1, 2024 அன்று பெறப்பட்டது. தகவல் கடிதம் 21 மார்ச் 2024 திகதியிடப்பட்டிருந்ததுடன், இது ஆர்டிஐ கோரிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாளிலிருந்து 28 நாட்களுக்கு அப்பால் உள்ளது. வரவுசெலவுத்திட்ட வாக்குறுதியின் முதன்மை நோக்கம், நிதி இலக்குகள்/உண்மைகள் மற்றும் அடையப்பட்ட பௌதீக முன்னேற்றம் ஆகியவற்றில் விரிவான மாற்றங்களைத் தகவல் வழங்கியது.*<br>*எனவே, வழங்கப்பட்ட தகவல்கள் முன்னேற்ற மதிப்பீட்டை நடத்துவதற்கு பொருத்தமானதாக இருந்தது.*<br><br>*முன்னேற்ற மதிப்பீட்டிற்கான தகவல்கள் கடும் முயற்சியுடன் (21 நாட்களுக்கு அப்பால்) பெறப்பட்டதால், முன்மொழிவின்* | *முற்றாக நிறைவேறியது*<br><br>*DAPH இன் ஆர்டிஐ பதிலின்படி, 17 காளைகளை இறக்குமதி செய்வதே திட்டத்தின் முதன்மை நோக்கமாக இருந்தது. இருப்பினும், ஏலதாரர் சமர்ப்பித்த ஆவணங்கள் திணைக்களத்தின் விவரக்குறிப்புகளைப் பூர்த்தி செய்யத் தவறியதால் இந்தத் திட்டம் கைவிடப்பட்டது. இதன் விளைவாக, CAIS-குண்டசாலேயில் உயர்தர ஆழமான உறைந்த விந்து உற்பத்தியைப் பராமரிப்பதற்குத் தேவையான உபகரணங்கள் மற்றும் உட்கட்டமைப்புகளை வாங்குவதற்கு திணைக்களம் தெரிவு செய்துள்ளது.*<br><br>*திட்டமிடப்பட்ட அனைத்து நடவடிக்கைகளுக்கும் போதிய வரவுசெலவுத்திட்ட ஒதுக்கீடுகள் இல்லாததால், அமைச்சிடம் கூடுதல் நிதியை DAPH கோரியதாக நடு ஆண்டு மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது. நிதிக் கட்டுப்பாடுகள் காரணமாக, ஜூன் 2023 முதல் காளை கொட்டகையை புதுப்பித்தல், வீரியம் மிக்க காளைகளுக்கான மேய்ச்சல் மேம்பாடு, இரண்டு விந்து விநியோக வாகனங்களை வாங்குதல் மற்றும் களப்* |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | வெளிப்படைத்தன்மை "ஒத்துழைக்கப்படாதது" என வகைப்படுத்தப்பட்டது. | பணியாளர்களுக்குப் பயிற்சி அளித்தல் போன்ற நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டன.<br><br>ஆர்டிஐ க்கு பதிலுக்கேற்ப , ரூபா 100 மில்லியன் மொத்த ஒதுக்கீட்டில், ரூபா 80.1 மில்லியன் பல்வேறு நடவடிக்கைகளில் செலவிடப்பட்டு , 80.1% நிதி முன்னேற்றம் அடையப்பட்டுள்ளது. இந்த நடவடிக்கைகளில் ஒரு ஆட்டோகிளேவ் ஐ கையகப்படுத்தல், ஒரு ஃபில்லிங் சீல் அச்சிடும் இயந்திரம், ஒரு ஸ்பெக்ட்ரோஃபோட்டோமீட்டர், ஒரு விந்து சேமிப்பு தொட்டி (800லி), ஒரு உடற்பயிற்சி பகுதியின் மேம்பாடு, இரண்டு புஷ் கட்டர்கள் மற்றும் 25 காளை கம்பளங்கள் ஆகியவை அடங்கும்.<br><br>மேலும், 80% பௌதீக முன்னேற்றம் எட்டப்பட்டுள்ளது.<br><br>ஒட்டுமொத்த முன்னேற்றம் 80% ஆகும்.<br><br>86% ஒட்டுமொத்த முன்னேற்றத்துடன் முன்மொழிவின் முன்னேற்றம் "முற்றாக நிறைவேறியது" என வகைப்படுத்தப்பட்டுள்ளது. |
| 56:<br>காலநிலை மாற்றங்கள் தொடர்பில் சர்வதேச பல்கலைக்கழகம் (IUCC)- அறிவை மேம்படுத்துதல், அனுபவத்தைப் பகிர்தல், கல்வி, பயிற்சி, திறன்களை உருவாக்குதல், காலநிலை மாற்றத்தைத் குறைக்கும் துறைகளில் திட்டங்களை மேம்படுத்துதல் | ரூபா 100 மில்லியன் | சுற்றாடல் அமைச்சு | வெளிப்படையற்றது<br><br>முன்மொழிவின் முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்கு ஆன்லைனில் எந்த தகவலும் கிடைக்கவில்லை.<br><br>DNB மற்றும் DFP ஆகியவை கல்வி அமைச்சை செயல்படுத்தும் முகமையாக அடையாளப்படுத்திய பின்னர் ஆர்டிஐ கோரிக்கை கல்வி அமைச்சிடம் சமர்ப்பிக்கப்பட்டது. எவ்வாறாயினும், கல்வி அமைச்சு இது அவர்களின் எல்லைக்கு உட்பட்டது அல்ல என்றும், இது சுற்றாடல் அமைச்சின் கீழ் உள்ளது என்றும் 19 மார்ச் 2024 திகதியிடப்பட்ட கடிதத்தில் (இது மார்ச் 25, 2024 அன்று பெறப்பட்டது) என்றும் எங்களுக்குத் தெரிவித்துள்ளது. இது 28 நாட்களுக்கு பிறகு கிடைக்கப்பெற்றதாகும்.<br><br>முன்னேற்றம் குறித்து எந்த தகவலும் வழங்கப்படாததால், முன்மொழிவின் | வெளிப்படுத்தப்படவில்லை<br><br>'அரசாங்க உத்தியோகபூர்வ செய்திகள் இணைய முகப்பின்' படி, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சர்வதேச காலநிலை மாற்ற பல்கலைக்கழகத்தை (ICCU) டிசம்பர் 3, 2023 அன்று உத்தியோகபூர்வமாக ஆரம்பித்தார். கொத்மலை நீர்த்தேக்கத்தை அருகாமையிலுள்ள 600 ஏக்கர் நிலம் ICCU க்காக ஒதுக்கப்பட்டுள்ளதாக கட்டுரையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.<br><br>DNB மற்றும் DFP ஆகியவை கல்வி அமைச்சை செயல்படுத்தும் முகமையாக அடையாளப்படுத்திய பின்னர் ஆர்டிஐ கோரிக்கை கல்வி அமைச்சிடம் சமர்ப்பிக்கப்பட்டது. எவ்வாறாயினும், கல்வி அமைச்சு இது அவர்களின் எல்லைக்கு உட்பட்டது அல்ல என்றும், இது சுற்றாடல் அமைச்சின் கீழ் உள்ளது என்றும் 19 மார்ச் 2024 திகதியிடப்பட்ட கடிதத்தில் (இது மார்ச் 25, 2024 |

| | | | | |
|---|---|---|---|---|
| ஆகியவற்றின் நோக்கத்திற்காக IUCC ஐ நிறுவுதல். | | | வெளிப்படைத்தன்மை "வெளிப்படையற்றது" என வகைப்படுத்தப்பட்டது. | அன்று பெறப்பட்டது) என்றும் எங்களுக்குத் தெரிவித்துள்ளது. இது 28 நாட்களுக்கு பிறகு கிடைக்கப்பெற்றதாகும்.<br><br>தகவல் கிடைக்காத காரணத்தினால் முன்னேற்றத்தை மதிப்பிட முடியாததால், முன்மொழிவின் முன்னேற்றம் "வெளிப்படுத்தப்படவில்லை" என வகைப்படுத்தப்பட்டது. |
| 59:<br>மதுவரித் திணைக்களத்தின் கீழ் புதிய ஆய்வுகூடத்தை நிறுவுதல் - மதுசார தயாரிப்புகளின் தரத்தை ஆய்வு செய்வதற்கும் தரநியமங்களை அமைப்பதற்கும் ஒரு பொறிமுறையாக மதுசார தயாரிப்புகள் தொடர்பான சோதனைகளை மேற்கொள்ளுதல். | ரூபா 100 மில்லியன் | மதுவரித் திணைக்களம் (DE) | ஒத்துழைக்கப்படாதது<br><br>முன்மொழிவின் முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்கு ஆன்லைனில் எந்த தகவலும் கிடைக்கவில்லை.<br><br>ஆர்டிஐ கோரிக்கை 31 ஜனவரி 2024 அன்று தாக்கல் செய்யப்பட்டு தகவல் ஆர்டிஐ கோரிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாளிலிருந்து 21 நாட்களுக்குப் பிறகு ஆனால் இது 28 நாட்களுக்குள் 2024 மார்ச் 12 அன்று பெறப்பட்டது.<br><br>முன்னேற்ற மதிப்பீட்டிற்கான தகவல்கள் கடும் முயற்சியுடன் (21 நாட்களுக்கு அப்பால்) பெறப்பட்டதால், முன்மொழிவின் வெளிப்படைத்தன்மை "ஒத்துழைக்கப்படாதது" என வகைப்படுத்தப்பட்டது. | பகுதியளவு நிறைவேறியது<br><br>டிசம்பர் 2023 நிலவரப்படி உண்மையான பௌதீக மற்றும் நிதி முன்னேற்றம் குறித்த தகவலை DE வழங்கியுள்ளது.<br><br>வழங்கப்பட்ட தகவல்களின்படி, முன்மொழிவுகளில் 10 பணிகள் உள்ளன, மேலும் முன்னேற்ற அறிக்கை இந்த பணிகளின் பௌதீக முன்னேற்றத்தை கோடிட்டுக் காட்டுகிறது. இந்தத் தகவலின் அடிப்படையில், டிசம்பர் 2023 நிலவரப்படி 75% பௌதீக முன்னேற்றம் எட்டப்பட்டுள்ளது.<br><br>மேலும், ரூபா 100 மில்லியன் மொத்த ஒதுக்கீட்டில் ரூபா 1.48 மில்லியன் மட்டுமே 'பணி 8: ஆய்வகக் கருவிகள், கண்ணாடிப் பொருட்கள், தளபாடங்கள் மற்றும் பிற தேவைகள் வாங்குவதற்கு' பயன்படுத்தப்பட்டுள்ளது, இது 1.48% நிதி முன்னேற்றத்தைக் குறிக்கிறது.<br><br>இதனால் ஒட்டுமொத்த முன்னேற்றம் 38.24% ஆகும்.<br><br>ஒட்டுமொத்த முன்னேற்றம் 38.24% என்பதால் முன்மொழிவின் முன்னேற்றம் "பகுதியளவில் நிறைவேற்றப்பட்டுள்ளது" என வகைப்படுத்தப்பட்டது |
| 60:<br>வீதி பராமரிப்பு நிதியம் ஒன்றினை நிறுவுதல் - அனைத்து வகையான வீதிகளையும் | ரூபா 100 மில்லியன் | போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு (MOTH)<br><br>வீதி அபிவிருத்தி அதிகாரசபை (RDA) | ஒத்துழைக்கப்பட்டது<br><br>முன்மொழிவின் முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்கு ஆன்லைனில் முன்கூட்டியே எந்த தகவலும் கிடைக்கவில்லை.<br><br>ஆர்டிஐ கோரிக்கை 31 ஜனவரி 2024 அன்று தாக்கல் செய்யப்பட்டு, 2024 பெப்ரவரி 22 அன்று தகவல் | முற்றாக நிறைவேறியது<br><br>வீதி பராமரிப்பு நிதியத்தை நிறுவுவது தொடர்பான அமைச்சரவை தீர்மானம் மார்ச் 27, 2023 அன்று எடுக்கப்பட்டது. போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரினால் முன்வைக்கப்பட்ட யோசனைக்கு அமைய, பாராளுமன்ற சட்டத்தின் மூலம் |

| | | | | |
|---|---|---|---|---|
| ஆண்டுதோறும் பராமரித்தல். | | | பெறப்பட்டது, இது ஆர்டிஐ கோரிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாளிலிருந்து 14 நாட்களுக்கு அப்பால், ஆனால் 21 நாட்களுக்குள்ளாகும். வழங்கப்பட்ட தகவலில் முன்மொழிவுக்கான திருத்தப்பட்ட செயற்பாட்டுத் திட்டம் இருந்தது.<br><br>வழங்கப்பட்ட தகவல் முன்னேற்ற மதிப்பீட்டை நடத்துவதற்கு பொருத்தமானதாக இருந்ததோடு தகவல்கள் சரியான நேரத்தில் வழங்கப்பட்டதால், முன்மொழிவுகளின் வெளிப்படைத்தன்மை "ஒத்துழைக்கப்பட்டது" என வகைப்படுத்தப்பட்டது. | உத்தேச நிதியத்தை ஸ்தாபிப்பதற்கான அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.<br><br>2023 டிசம்பர் வரையிலான காலாண்டு பௌதீக இலக்குகள் மற்றும் உண்மையான பௌதீக முன்னேற்றம் ஆகியவற்றை உள்ளடக்கிய திருத்தப்பட்ட செயல்திட்டத்தை செயற்படுத்தும் RDA வழங்கியுள்ளது. டிசம்பர் 2023க்குள் 75% பௌதீக முன்னேற்ற இலக்கு நிர்ணயிக்கப்பட்டு அடையப்பட்டது, இதன் விளைவாக 100% பௌதீக முன்னேற்ற விகிதம் ஏற்பட்டது. மேலும், RDA ஆனது, வருமான உரிமங்களின் மீதான வீதி பராமரிப்பு வரியை கோடிட்டுக் காட்டும் திருத்தப்பட்ட வரைவை, ஆகஸ்ட் 28, 2023 அன்று மேலதிக நடவடிக்கைகளுக்காக அரசிறைக் கொள்கைகள் திணைக்களத்திடம் (DFP) சமர்ப்பித்துள்ளது.<br><br>இருப்பினும், திருத்தப்பட்ட செயற்பாட்டுத் திட்டம், முன்மொழிவுக்கு நிதி இலக்குகள் இல்லை என்றும், 2023 ஆம் ஆண்டில் நிதி எதுவும் செலவிடப்படவில்லை என்றும் குறிப்பிடுகிறது.<br><br>எனவே ஒட்டுமொத்த முன்னேற்றம் 100% ஆகும்.<br><br>ஒட்டுமொத்த முன்னேற்றம் 100% என்பதால் முன்மொழிவின் முன்னேற்றம் "முற்றாக நிறைவேறியது" என வகைப்படுத்தப்பட்டுள்ளது.<br><br>குறிப்புகள்: மீதம் உள்ள 25% பௌதீக முன்னேற்றத்தை செயல்படுத்தும் நிறுவனம் எப்போது முடிக்க திட்டமிட்டுள்ளது அல்லது ரூபா 100 மில்லியன் எவ்வாறு பயன்படுத்தப்படும் என்பது திருத்தப்பட்ட செயற்பாட்டுத் திட்டத்தில் குறிப்பிடப்படவில்லை. மேலும், வரவுசெலவுத்திட்ட உரை 2023 இதை பல வருடங்கள் நீடிக்கும் திட்டமாக அடையாளம் காணவில்லை |
| | | | ஒத்துழைக்கப்பட்டது | முன்னேற்றம் அற்றது |

| | | | | |
|---|---|---|---|---|
| 68:<br>சிறைக்கைதிகளுக்கான துப்பரவேற்பாடு | வரவுசெலவுத்திட்ட உரையிலிருந்து ஒதுக்கீடு- ரூபா 100 மில்லியன்<br><br>2023 வரவுசெலவுத் திட்ட மதிப்பீடுகளிலிருந்து ஒதுக்கீடு- ரூபா 200 மில்லியன்<br><br>இந்த நோக்கத்திற்கான மொத்த ஒதுக்கீடு- ரூபா 300 மில்லியன் | சிறைச்சாலைகள் திணைக்களம் (DP) | முன்மொழிவின் முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்கு ஆன்லைனில் எந்த தகவலும் கிடைக்கவில்லை.<br><br>ஆர்டிஐ கோரிக்கை 31 ஜனவரி 2024 அன்று தாக்கல் செய்யப்பட்டு, 2024 பெப்ரவரி 21 அன்று தகவல் பெறப்பட்டது, இது RTI கோரிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாளிலிருந்து 14 நாட்களுக்கு பிறகு ஆனால் 21 நாட்களுக்குள்ளாகும்.<br><br>வழங்கப்பட்ட தகவல் முன்னேற்ற மதிப்பீட்டை நடத்துவதற்கு பொருத்தமானதாக இருந்தது.<br><br>வழங்கப்பட்ட தகவல் முன்னேற்ற மதிப்பீட்டை நடத்துவதற்கு பொருத்தமானதாக இருந்ததோடு தகவல்கள் சரியான நேரத்தில் வழங்கப்பட்டதால், முன்மொழிவுகளின் வெளிப்படைத்தன்மை "ஒத்துழைக்கப்பட்டது" என வகைப்படுத்தப்பட்டது. | DPயின் RTI பதிலின்படி, தேசிய வரவுசெலவுத்திட்ட திணைக்களம் (DNB) 200 மில்லியன் ரூபாயை சிறைக கைதிகளின் துப்பரவேற்பாடு வசதிகளை மேம்படுத்துவதற்காக' வரவுசெலவுத்திட்ட தலைப்பு 232-1-01 இன் கீழ் ஒதுக்கீடு செய்துள்ளது. இந்த ஒதுக்கீட்டிற்கு மேலதிகமாக, வரவுசெலவுத் திட்ட 2023 உரையில் இருந்து மேலும் ரூபா 100 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது.<br><br>ரூபா 94.5 மில்லியன் மதிப்புள்ள நடவடிக்கைகளின் நிதி மற்றும் பௌதீக முன்னேற்றத்தை DPயின் முன்னேற்ற அறிக்கை உள்ளடக்கியது (விநியோகம் செய்யப்பட்ட தொகை). இதில் ரூபா 86.7 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது. டிசம்பர் 2023 நிலவரப்படி, மொத்த நிதி முன்னேற்றம் 29% ஆக உள்ளது (ரூபா 300 மில்லியன் இல் ரூபா 86.7 மில்லியன்).<br><br>மொத்த வரவுசெலவுத் திட்ட முன்மொழிவின் பௌதீக முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்கு பெறப்பட்ட தகவல்கள் போதுமானதாக இல்லை.<br><br>வழங்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில் திட்டத்தின் ஒட்டுமொத்த முன்னேற்றம் 29% ஆகும்.<br><br>முன்னேற்றம் 33% க்கு குறைவாக இருப்பதால் "**முன்னேற்றம் அற்றது**" என வகைப்படுத்தப்பட்டுள்ளது. |
| 22:<br>வைத்தியர்களுக்கான பட்டபின் படிப்பு வாய்ப்புகள் - பேராதனை, உருகுனை மற்றும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகங்களில் வைத்தியர்களுக்கான பட்டபின் படிப்புத் | ரூபா 60 மில்லியன் | கல்வி அமைச்சு (MOE)<br><br>உயர் கல்விப் பிரிவு | வெளிப்படையற்றது<br><br>முன்மொழிவின் முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்கு ஆன்லைனில் எந்த தகவலும் கிடைக்கவில்லை.<br><br>ஜனவரி 31, 2024 அன்று ஆர்டிஐ கோரிக்கை தாக்கல் செய்யப்பட்டது; இருப்பினும், பல பின்தொடர்தல்கள் இருந்தபோதிலும் MOE இடமிருந்து எந்த பதிலும் வரவில்லை.<br><br>முன்னேற்றம் குறித்து எந்த தகவலும் வழங்கப்படாததால், முன்மொழிவின் | வெளிப்படுத்தப்படவில்லை<br><br>எந்த தகவலும் ஆன்லைனில் முன்கூட்டியே கிடைக்கவும் இல்லை, ஆர்டிஐ கோரிக்கை மூலம் செயல்படுத்தும் நிறுவனத்திடமிருந்து பெறப்படவுமில்லை.<br><br>தகவல் கிடைக்காத காரணத்தினால் முன்னேற்றத்தை மதிப்பிட முடியாததால், முன்மொழிவின் முன்னேற்றம் "வெளிப்படுத்தப்படவில்லை" என வகைப்படுத்தப்பட்டது. |

| | | | | |
|---|---|---|---|---|
| திட்டங்களை நிறுவுதல். | | | வெளிப்படைத்தன்மை "வெளிப்படையற்றது" என வகைப்படுத்தப்பட்டது. | |

கொள்கைத் திட்டங்கள்

| பந்தி இலக்கம் மற்றும் முன்மொழிவு | செயற்படுத்தும் நிறுவனம் | வெளிப்படைத்தன்மை | முன்னேற்றம் |
|---|---|---|---|
| 30:<br>தரவுப் பாதுகாப்பு அதிகார சபையை உருவாக்குதல் | தொழில்நுட்ப அமைச்சு (MOT) | வெளிப்படையானது | நிறைவேற்றப்பட்டுள்ளது |
| | | முன்மொழிவின் முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்குத் தொடர்புடைய தகவல்கள் ஆன்லைனில் முன்கூட்டியே கிடைத்தன.<br><br>ஆர்டிஐ கோரிக்கை 31 ஜனவரி 2024 அன்று தாக்கல் செய்யப்பட்டு, 2024 பெப்ரவரி 21 அன்று தகவல் பெறப்பட்டது, இது RTI கோரிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாளிலிருந்து 14 நாட்களுக்கு பிறகு, ஆனால் 21 நாட்களுக்குள் உள்ளது. வழங்கப்பட்ட தகவல் பொருத்தமானதாகவும் முன்னேற்ற மதிப்பீட்டை நடத்துவதற்கு பயனுள்ளதாகவும் இருந்தது.<br><br>முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்கான போதுமான தகவல்கள் ஆன்லைனில் முன்கூட்டியே வழங்கப்பட்டதால், முன்மொழிவு "வெளிப்படையானது" என வகைப்படுத்தப்பட்டது. | 2022 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க தனிப்பட்ட தரவுப் பாதுகாப்புச் சட்டம், மற்றும் அரசாங்கத்தின் அதிவிசேட வர்த்தமானி எண். 2341/59 (ஜூலை 21, 2023 திகதியிடப்பட்டது) என்பவை ஆன்லைனில் கிடைக்கின்றன. இது தனிப்பட்ட தரவுப் பாதுகாப்புச் சட்டத்தின் பகுதி V இன் தரவு பாதுகாப்பு ஆணையத்தை நிறுவுவது தொடர்பானதோடு இயக்குநர்கள் குழுவின் அரசியலமைப்பின் விதிகளை உள்ளடக்கியது<br><br>21 பெப்ரவரி 2024 அன்று பெறப்பட்ட MOTயின் ஆர்டிஐ பதிலின்படி, ஆகஸ்ட் 11, 2023 அன்று, தரவுப் பாதுகாப்பு ஆணையத்திற்கான இயக்குநர்கள் குழு நியமிக்கப்பட்டு, அதன் ஆட்சிக் குழு நிறுவப்பட்டது. அதிகாரசபையின் செயல்பாடுகளை மேற்பார்வையிடுவதற்காக ஒரு செயற்படும் தலைமை இயக்குநர் நவம்பர் 9, 2023 அன்று நியமிக்கப்பட்டார். மேலும், ஒழுங்குமுறை விடயங்கள் தொடர்பான பணிகள் தரவுப் பாதுகாப்புச் சட்டத்தின் பிரகாரம் தொடங்கப்பட்டுள்ளன.<br><br>2022 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க தரவுப் பாதுகாப்புச் சட்டம், மற்றும் அரசாங்கத்தின் அதிவிசேட வர்த்தமானி எண். 2341/59 என்பவை ஆன்லைனில் கிடைப்பதால் முன்மொழிவின் முன்னேற்றம் "நிறைவேற்றப்பட்டுள்ளது" என வகைப்படுத்தப்பட்டது. |
| 43: | | வெளிப்படையற்றது | உரிமை கோரப்படவில்லை |

| | | | |
|---|---|---|---|
| புதிய நிதியியல் சொத்து முகாமைத்துவ கம்பனிகள் சட்டம் | கிடைக்கவில் லை | முன்மொழிவின் முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்கு ஆன்லைனில் எந்த தகவலும் கிடைக்கவில்லை.<br><br>ஜனவரி 31, 2024 அன்று மூன்று ஆர்டிஐ கோரிக்கைகள் தாக்கல் செய்யப்பட்டன; இருப்பினும், பல பின்தொடர்தல்கள் இருந்தபோதிலும், DNB மற்றும் DFP ஆல் அடையாளம் காணப்பட்ட செயல்படுத்தும் நிறுவனத்திடமிருந்து எந்த பதிலும் வரவில்லை.<br><br>முன்னேற்றம் குறித்து எந்த தகவலும் வழங்கப்படாததால், முன்மொழிவின் வெளிப்படைத்தன்மை " வெளிப்படையற்றது " என வகைப்படுத்தப்பட்டது. | DNB, CBSL ஐ செயல்படுத்தும் முகவராக ஜூலை 27, 2023 என திகதியிடப்பட்ட கடிதத்தில் அடையாளம் காட்டிய பிறகு, CBSLக்கு ஆர்டிஐ கோரிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. இருப்பினும், CBSL அந்த கோரிக்கையை பெப்ரவரி 28, 2024 அன்று MOF க்கு மாற்றியது. MOF கோரிக்கையை DFP க்கு மார்ச் 5, 2024 அன்று திருப்பி அனுப்பியது.<br><br>DFP மற்றும் DNB ஆல் அடையாளம் காணப்பட்ட நிறுவனம் தனது அதிகார வரம்பை மறுப்பதால், முன்மொழிவு "உரிமை **கோரப்படவில்லை** " என வகைப்படுத்தப்பட்டுள்ளது. |
| 44:<br>நுண்நிதி கொடுகடன் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையினை தாபித்தல் (MCRA) | இலங்கை மத்திய வங்கி (CBSL) | வெளிப்படையானது<br><br>முன்மொழிவின் முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்குத் தொடர்புடைய தகவல்கள் ஆன்லைனில் முன்கூட்டியே கிடைக்கின்றன.<br><br>ஆர்டிஐ கோரிக்கை 31 ஜனவரி 2024 அன்று தாக்கல் செய்யப்பட்டு தகவல் ஆர்டிஐ கோரிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாளிலிருந்து 14 நாட்களுக்குள் 2024 பெப்ரவரி 15 அன்று பெறப்பட்டது.<br>வழங்கப்பட்ட தகவல் பொருத்தமானதாகவும் முன்னேற்ற மதிப்பீட்டை நடத்துவதற்கு பயனுள்ளதாகவும் இருந்தது.<br><br>முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்கான போதுமான தகவல்கள் ஆன்லைனில் முன்கூட்டியே வழங்கப்பட்டதால், முன்மொழிவு "வெளிப்படையானது" என வகைப்படுத்தப்பட்டது. | பகுதியளவில் நிறைவேற்றப்பட்டுள்ளது<br><br>நுண்நிதி கொடுகடன் ஒழுங்குபடுத்தல் அதிகார சபை மசோதா அக்டோபர் 30, 2023 திகதியிட்ட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதோடு நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரால் ஜனவரி 09, 2024 அன்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது (மசோதா எண். 234). சட்டம் இன்னும் நிறைவேற்றப்படவில்லை.<br><br>ஏழு தனிநபர்கள் மற்றும் ட்ரான்ஸ்பரன்சி இன்டர்நேஷனல் ஸ்ரீலங்கா (TISL) உச்ச நீதிமன்றத்தில் (SC SD 08/2024, 09/2024, 11/2024, 14/2024, 15/2024, 16/2024 மற்றும் 17/2024 ) நுண்நிதி கடன் வழங்குவோரின் சுரண்டல் நடைமுறைகளை மசோதா திறம்பட ஒழுங்குபடுத்தத் தவறுவதோடு நியாயத்தன்மை, விகிதாசாரம், இயற்கை நீதி, அதிகாரங்களைப் பிரித்தல் மற்றும் சட்ட உறுதிப்பாடு ஆகியவற்றின் தரங்களை பூர்த்தி செய்யவில்லை, இதனால் அரசியலமைப்பின் 3 மற்றும் 4 வது பிரிவுகளுடன் 83 வது பிரிவை மீறுகிறது என வாதிட்டு மனு தாக்கல் செய்தனர்.<br>நடைமுறைப்படுத்தும் முகவரின் பதிலின்படி, CBSL மசோதாவை வரைவதற்கான தொழில்நுட்ப உதவியை மட்டுமே வழங்கியது மற்றும் அந்தச் சட்டத்தை செயல்படுத்துவதற்கு நிதி அமைச்சு பொறுப்பாகும்.<br><br>பெப்ரவரி 20, 2024 அன்று நுண்நிதி மற்றும் கடன் ஒழுங்குமுறை ஆணைய மசோதா அரசியலமைப்பிற்கு முரணானது என்று உச்ச நீதிமன்றம் (எஸ்சி) தீர்மானித்துள்ளதாக என்று கௌரவ. |

| | | | |
|---|---|---|---|
| | | | சபாநாயகர் அறிவித்தார். இந்த முரண்பாடுகளை நிவர்த்தி செய்ய, சில உட்பிரிவுகளுக்கு சிறப்புப் பாராளுமன்ற பெரும்பான்மை அவசியமாவதோடு மற்றவை சிறப்புப் பெரும்பான்மை மற்றும் பொது வாக்கெடுப்பு மூலம் மக்களால் அங்கீகரிக்கப்பட வேண்டும். அதன் பரிந்துரைகளின்படி மசோதாவைத் திருத்துவதன் மூலம் இந்தப் பிரச்சினைகளைத் தீர்க்க முடியும் என்று நீதிமன்றம் சுட்டிக்காட்டியது.<br><br>அதைத் தொடர்ந்து, பொது நிதிக்கான பாராளுமன்றக் குழுவால் கூட்டப்பட்ட பலதரப்பு ஆலோசனைகளுக்கு இணங்க, *MOF* அதன் ஆரம்ப நோக்கங்களை திறம்பட நிவர்த்தி செய்ய இயலாமையின் காரணமாக மறுவடிவமைப்பிற்கான மசோதாவை திரும்பப் பெற முடிவு செய்தது.<br><br>நுண்நிதி கொடுகடன் ஒழுங்குபடுத்தல் அதிகார சபை மசோதா ஆன்லைனில் வெளியிடப்பட்டாலும், அரசியலமைப்புச் சிக்கல்கள் காரணமாக தொடர முடியவில்லை என்பதால், முன்மொழிவின் முன்னேற்றம் "பகுதியளவில் நிறைவேற்றப்பட்டுள்ளது" என வகைப்படுத்தப்பட்டது. |
| *11:*<br>புதிய தொழிற் கொள்கைகள் | தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு | வெளிப்படையற்றது<br><br>முன்மொழிவின் முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்கு ஆன்லைனில் எந்த தகவலும் கிடைக்கவில்லை.<br><br>ஜனவரி *31, 2024* அன்று மூன்று ஆர்டிஐ கோரிக்கைகள் தாக்கல் செய்யப்பட்டன; இருப்பினும், பல பின்தொடர்தல்கள் இருந்தபோதிலும், *DNB* மற்றும் *DFP* ஆல் அடையாளம் காணப்பட்ட செயல்படுத்தும் நிறுவனத்திடமிருந்து எந்த பதிலும் வரவில்லை.<br><br>முன்னேற்றம் குறித்து எந்த தகவலும் வழங்கப்படாததால், முன்மொழிவின் வெளிப்படைத்தன்மை " வெளிப்படையற்றது " என வகைப்படுத்தப்பட்டது. | வெளிப்படுத்தப்படவில்லை<br><br>தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு, மே *16, 2023* அன்று 'இலங்கையில் தொழிலாளர் சீர்திருத்தங்கள் குறித்த உள்ளீடுகளுக்கான அழைப்பு' ஒன்றை வெளியிட்டு, இந்த சீர்திருத்தங்கள் தொடர்பாக அனைத்து பங்குதாரர்களையும் ஆர்வமுள்ள தரப்பினரையும் தங்கள் உள்ளீட்டை சமர்ப்பிக்குமாறு அழைப்பு விடுத்துள்ளது. அமைச்சு மேற்கூறிய நோக்கத்திற்காக பொது அமர்வுகளையும் நடத்தியது.<br><br>முன்மொழிவின் முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்கு போதுமான தகவல்கள் ஆன்லைனில் முன்கூட்டியே கிடைக்கவில்லை என்பதோடு *RTI* கோரிக்கைக்கு பதிலளிக்கும் வகையில் செயல்படுத்தும் நிறுவனத்திடமிருந்து எந்த தகவலும் பெறப்படவில்லை.<br><br>தகவல் கிடைக்காத காரணத்தினால் முன்னேற்றத்தை மதிப்பிட முடியாததால், முன்மொழிவின் முன்னேற்றம் "வெளிப்படுத்தப்படவில்லை" என வகைப்படுத்தப்பட்டது. |

# பொறுப்புத்துறத்தல்

*இந்த இணையத்தளத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ள தகவல்கள் அனைத்தும் அரச ஆவணங்கள், உத்தியோகபூர்வ வெளியீடுகள், பொது ஆவணங்கள் மற்றும் தகவல் அறியும் உரிமை சட்டத்தின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்கள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு தொகுக்கப்பட்டுள்ளன. இந்த இணையத்தளத்தில் பிரசுரிக்கப்படும் எந்தத் தகவலும் வெரிட்டே ரிசர்ச் நிறுவனத்தினதோ அந்நிறுவனத்தில் பணிபுரிபவர்களினதோ தனிப்பட்ட நோக்கங்களோ கருத்துக்களோ கிடையாது. இந்த இணையத்தளத்தில் உள்ள தகவல்களின் காரணமாக ஏற்படும் எவ்வகையான இழப்புக்கள் மற்றும் சேதங்களிற்கோ அல்லது ஏற்படலாம் என அனுமானிக்கக்கூடிய எவ்வகையான இழப்பு, சேதம் அல்லது நற்பெயரிற்கான களங்கங்களிற்கோ வெரிட்டே ரிசர்ச் நிறுவனம் பொறுப்பேற்காது.*

***இந்த இணையத்தளத்தில் பிரசுரிக்கப்படும் தரவுகள் அனைத்தையும் நம்பகமான மூலங்களில் இருந்து பெற்றுக்கொள்வதற்கான அனைத்து முயற்சிகளும் எடுக்கப்பட்டிருக்கும் அதேவேளை, அத்தரவுகளைக் கொண்டு பெற்ற பெறுபேறுகளில் காணப்படும் தவறுகள் அல்லது விடுபடல்களிற்கு வெரிட்டே ரிசர்ச் நிறுவனம்*** *பொறுப்பாக மாட்டாது.* ***வெரிட்டே ரிசர்ச் நிறுவனத்தின் அனுமதியின்றி இந்த இணையத்தளத்தில் உள்ள உள்ளடக்கங்களை வணிக நோக்கத்திற்காக திருத்தவோ, வெளியிடவோ, கைமாற்றவோ, பரவலாக்கவோ, விற்பனை செய்யவோ, மீள்பதிக்கவோ, இதனைத் தழுவி புதிய உள்ளடக்கங்களை உருவாக்கவோ, பகிர்ந்தளிக்கவோ, மீள்இடுகையிடவோ அல்லது காட்சிப்படுத்தவோ எவரிற்கும் அனுமதியில்லை. அத்துடன் வெரிட்டே ரிசர்ச் நிறுவனத்தின் முன்அனுமதியின்றியோ, முன்அனுமதியுடனோ இந்த இணையத்தளத்தில் உள்ள தரவுகளைக் கொண்டு மீள்உருவாக்கப்படும் எவ்வகையான வெளியீடுகளிற்கும் வெரிட்டே ரிசர்ச் நிறுவனம்*** *பொறுப்பேற்காது.*

***வெரிட்டே ரிசர்ச் எவ்விதமான அரசியல் கட்சிகளை பிரதிநிதிப்படுத்துவதோ, ஆதரிப்பதோ, ஒப்புதல் வழங்குவதோ அல்லது எவ்விதமான அரசியற் கட்சிகளுடனோ அரசியலுடன் சம்பந்தப்பட்ட நிறுவனங்களினுடனோ தொடர்புபட்டது அல்ல. அத்துடன் எமது பகுப்பாய்வுகள் அனைத்தும் புள்ளிவிபரங்களை மாத்திரம் அடிப்படையாகக் கொண்ட அனுமானங்கள் ஆகும்.***

***இந்த இணையத்தளத்தில் உள்ள அனைத்து தரவுகளும் மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் எவ்வித கட்டணங்களும் இன்றி வழங்கப்படுகின்றது.***

***இந்த இணையத்தளம் இங்கு குறிப்பிடப்பட்டுள்ள தரவுகளின் போக்கினை குறித்துக்காட்டுவதற்காக, வெரிட்டே ரிசர்ச் இனால் சுயாதீனமாக தயாரிக்கப்பட்ட பல பகுப்பாய்வுகளையும் உள்ளடக்கியுள்ளது. இப்பகுப்பாய்வுகளை மீள் உருவாக்கம் செய்யும் முன் வெரிட்டே ரிசர்ச் நிறுவனத்தின் அனுமதியைப் பெறுவது கட்டாயமாகும்.***